DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyragu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Please Call me
Selva Karthigesu, Sales Representative
416-648-9757
CENTURY 21

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா
2021 UTHAYAN
# உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1319
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday July 16, 2021

## முழுமையாக தடுப்பூசி பெற்ற சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் கனடாவிற்குள் நுழைய அனுமதி



**- பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு**


“அமெரிக்கா உட்பட வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு விருப்பத்தோடு வருபவர்களில், முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொண்ட சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் மட்டுமே கனடாவிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். இது பற்றிய அறிவிப்புக்கள் விரைவில் விடுக்கப்படும்”

இவ்வாறு கனடாவின் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று வியாழக்கிழமை மொன்றியாலில் இடம் பெற்ற அரச நிகழ்வு ஒன்றில் தெரிவித்தார்.

முழுமையாக தடுப்பூசி போட்டவர்கள் கனடாவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவது குறித்து அடுத்த வாரம் ஒரு அறிவிப்பு எதிர்பார்க்கப்படுகிறது என்று பிரதமர் மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

## ரொறன்ரோ மின்சார வாரியத்தின் தலைமை அதிகாரியின் சம்பளத்தை மீளாய்வு செய்ய நகரசபை விவாதித்தது



ரொறன்ரோ மின்சார வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான அந்தோனி ஹைன்ஸ் என்பவர் 2015 முதல் தனது அடிப்படை சம்பளத்தில் 95 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்புள்ள போனஸ் கொடுப்பனவைப் பெற்றுள்ளதாகவும் இந்தத் தொகை வருடத்திற்கு 9 இலட்சம் டாலர்களாக இருந்தது என்றும், அவரது வருடாந்த சம்பளம் ஒரு மில்லியன் டாலர்களைத் தாண்டுகின்றது என்பதும் கேள்விகளை எழுப்பியது. இது தற்போதைய கோவிட்-19 தொற்றுக் காலத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பல தரப்பில் எழுப்பப்பட்ட பிரச்சனைகளாக அமைந்ததால் ரொறன்ரோ நகரசபையினால் நிர்வகிக்கப்படும் ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் மின்சார வாரியத்தின் உயர் அதிகாரிகளின் சம்பளத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற நோக்கில் நகர சபையின் மேயர் மற்றும் அங்கத்தவர்கள் ஆகியோர் கூடி முடிவெடுக்க முனைந்தனர்.

இந்நிலையில் ரொறன்ரோ மின்சார வாரியத்தில் பணியாற்றும் மற்ற உயர் அதிகாரிகள் வழக்கமாக 50 வீதமான போனஸைப் பெறுகிறார்கள். மேலும் நகரசபையின் நிர்வாகத்தில் இயங்கும் ரொறன்ரோ சமூக வீட்டு வசதி வாரியத்தின் மற்றும்

*(தொடர்ச்சி 3ம் பக்கம்)*

**சிறு விளம்பரங்கள் 4ம் பக்கத்தில்**
**Classified Ads On Page 4**
‘உதயன்’ சிறு விளம்பரங்கள் மூலம் அதிக பயனடையுங்கள். குறைந்த கட்டணத்தில் நிறைந்த பலன்.
தற்போது புதுப் பொலிவுடன் 4ம் பக்கத்தில் பாருங்கள், படியுங்கள்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# ஏதிர்வரும் ஆகஸ்ட் 6 திகதி வெள்ளியன்று மலர்கிறது...

வெள்ளி விழா 25th ANNIVERSARY
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

## "உதயன்" வெள்ளிவிழா ஆண்டுச் சிறப்பிதழ்

- உங்கள் அபிமானத்திற்குரிய பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் எதிர் வரும் **06-08-2021** வெள்ளிக்கிழமை வெளிவருகின்றது.
- தமிழ் பேசும் நல்லுலக நாடுகளிலிருந்து சிறப்புக் கட்டுரைகள், இலக்கியப் படைப்புக்கள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றோடும் அதிக பக்கங்களோடும் வாசகர்களையும் வர்த்தக அன்பர்களையும் எழுத்தாள நண்பர்களையும் மகிழ்விக்க மலர்கிறது.
- சிறப்பிதழில் தங்கள் படைப்புக்கள் இடம்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கவிஞர்கள் வரவேற்கப்படுகின்றார்கள். தங்கள் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரித்து ஆதரவளிக்கவும் வாழ்த்தவும் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்.

VJ-Colombo

**416 732 1608** அல்லது **416 752 1524** | மின்னஞ்சல்:- **uthayannews@yahoo.com**



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).




5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

## உதயன் கதிரோட்டம்

# ஏழைகளை மீட்டெடுக்க முடியாத உலகின் ஆட்சி பீடங்கள்

## இலங்கைத் தலைவர்களும் இதற்கு விதி விலக்கல்ல!

இன்று உலக நாடுகள் பலவற்றிலும் குறிப்பாக வறிய நாடுகளில் 925 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். வருடத்திற்கு 25 மில்லியன் குழந்தைகள் உலகில் பட்டினியால் இறக்கின்றன. போசாக்கற்ற உணவை உற்கொள்ளுவதால் வறிய நாடுகளில், 170 மில்லியன் குழந்தைகள் வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்படுகின்றார்கள் என்று தகவல்கள் கூறுகின்றன. சனத்தொகை அதிகரிக்கும் நிலையில் பட்டினி இறப்புக்களும் வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறப்பதும் குழந்தைகள் வளர்ச்சியில் பாதிப்புக்கள் ஏற்படுவதும் உலகில் பட்டினி அதிகரிப்பும் மேலும் மேலும் அதிகரித்துச் செல்லும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கை என்னும் தீவிற்கும், அங்கு வடக்கும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கும் இது நன்கு பொருந்தும் என்பதே எமது கருத்தாகும். அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் எம்மையும் பாதிக்கின்றன. ஆனால் இவர்களுக்கு உதவி செய்வதற்கு அரச அதிகாரிகளைத் தவிர வேறு ஒரு-வரும் இல்லை என்பதே வெளிச்சமாகத் தெரிகின்றது.
இவ்வாறான நிலை தொடர்ந்தால் இலங்கையில் எமது தமிழர் பகுதி-யிலும் பட்டினியால் மக்கள் இறக்கும் நிலை வரலாம் என்றே அஞ்ச வேண்டியுள்ளது.

உலகில் இடம்பெறுவதைப் நாம் படிக்க முன்னர் எமது தாயகத்தின் தற்போதைய அவல நிலையை நாம் நோக்க வேண்டும். தாயக ஒளி ஊடகங்கள் பலவற்றில் செய்திகளாகத் தோன்றும் நிகழ்ச்சிகளில் நூற்றுக்கணக்கான குடும்பத் தலைவிகள் கண்ணீர் விடுத்த வண்ணம் தங்கள் கதைகளைச் சொல்லுகின்றார்கள். பசியாலும் வசிக்க வீடுகள் அற்ற நிலையிலும், பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் சென்று தகுந்த கல்வியைப் பெற முடியாமலும் உள்ள விபரங்களை கேட்கும் போது, எமது தமிழ் அரசியல்வாதிகளைத் தான் 'திட்ட' வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தின் கதிரைகளில் பல ஆண்டுகளாக அமர்ந்திருந்த மாவை சேனாதிராஜா, ஸ்ரீதரன் சிவஞானம், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்ற இவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக வருவதற்கு முன்னர் இருந்த நிலையிலிருந்து 'உயர்ந்தவர்களாக' போதிய செல்வத்தை பெருக்கியும் தங்கள் குடும்ப உறுப்பினர்களின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை வளர்த்தும் செல்வந்தர்களாக பவனி வருகின்றார்கள். இவர்களுக்கு பாராளுமன்றப் பதவிகள் பெற்றுக் கொடுத்தவை பல 'செல்வங்கள்' ஆகும்.
ஆனால் வடக்கும் கிழக்கு வாழ் மக்கள், தொகையில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள், கணவர்மாரால் கைவிடப்பட்டவர்கள், பெற்றோரில் இருவரையும் இழந்தவர்கள் என்றெல்லாம் வகை வகையாய் வறுமைக் கோட்டிற்குள் கட்டுண்டு கிடக்கின்றார்கள்.
நாம் முன்னர் தெரிவித்தது போன்று காட்சி ஊடகங்களின் முன்பாக வந்து கண்ணீர் வடித்து தங்களை சோகக் கதைகளை' பக்கம் பக்கமாக வடிக்கின்றார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளின் தலைவராக தன்னை தள்ளாடும் வயதிலும் காட்டிக் கொள்ளும் சம்பந்தன் போன்றவர்களுக்கு எங்கள் வறிய மக்களின் கதைகளைக் கேட்க நேரமில்லை. ஆனால் அவர்களுக்கு ரணில் போன்ற குள்ள நரிகளின் கதைகளைக் கேட்க நேரம் கிடைத்துள்ளது. மீண்டும் அவ்வாறான அரசியல்வாதிகளைக் அரியாசனத்தில் அமர்த்துவதற்கு முயற்சி செய்கின்றார்கள. மக்களைப் புறக்கணித்தும் அவர்களின் கோரிக்கைகளை நிராகரித்தும் பதவிகளில் தொடரும் அவர்களால் என்ன பலன் என்பதை மக்கள் சிந்திக்கும் காலம் நெருங்கிவிட்டது.

இனி முழு உலகை எடுத்துக் கொண்டால், அதிகப்படியான மக்கள் தொகையால் சமூக, பொருளாதார சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. காடுகளுக்கான நிலப்பரப்பு குறைந்து வருகின்றது. கிராம மக்கள் பிழைப்புக்காக நகரத்தை நோக்கி நகர்கிறார்கள். அங்கே குடிசைகள் பெருகி சுற்றுச்சூழல் சீர்கெடுகிறது. குடிநீர் பற்றாக்குறை, மின்சார பற்றாக்குறை ஏற்படுகின்றது. பூமியின் கொள்ளளவை விஞ்சிய உலக சனத்தொகை அதிகரிப்பானது ஆபத்தான விளைவுகளையே உருவாக்கும் என்பதால் உலக சனத்தொகை வளர்ச்சி வீதத்தை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய நிலை பூமியில் தோன்றியிருக்கின்றது என்கின்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள்.
இந்த நிலை இலங்கைக்கு வரும் போது எமது மக்களைக் காப்பாற்ற யார் வருவார்கள் என்பதே எமது கேள்வியாக உள்ளது. இலங்கையின் தற்போதைய அரசின் போக்கில் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. தமிழ் அரசியல் தலைவர் தங்கள் பாராளுமன்றப் பதவிகளை பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காக பயன்படுத்துவதாகத் தெரியவில்லை.
இவற்றை நாம் தொகுத்துப் பார்க்கும் போது உலகில் ஏற்படும் பல பொதுவான தாக்கங்களால் எமது தாயகத்திலும் மலையகத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வும் வளமும் மங்கிய வண்ணமே நகரப்போகின்றன. மக்களைப் பயன்படுத்தி அரசியல் பதவிகள் போன்ற உயர்ந்த இடங்களைத் தட்டிக் கொள்ள, தவிக்கும் மக்கள் தங்கள் உயிர்களைத் தக்கவைக்க என்ன செய்வார்கள் என்ற கேள்விகளையே நாம் இவ்வாரம் முன்வைக்கின்றோம்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# ரொறன்ரோ மின்சார வாரியத்தின் தலைமை அதிகாரியின் சம்பளத்தை மீளாய்வு செய்ய நகரசபை விவாதித்தது

*(முன் பக்கத் தொடர்ச்சி)*

அது போன்ற அரச நிறுவனங்களின் நிர்வாகிகள் போனஸ் ஊதியத்தை 25 சதவீத சம்பளமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது ஒரு நகர சபையின் கொள்கையாக இருந்தபோதிலும் மின்சார வாரியத்தின் தலை-மை அதிகாரி மட்டும் எவ்வாறு இவ்வளவு அதிகமான பணத்தை தனது வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியும் என்று தொழில்நுட்ப பணியாளர்கள் தொழிற்சங்கம் கேள்விகளை எழுப்பியது.
மேற்படி விடயம் தொடர்பாக விவாதித்த நகரசபை மேயர் மற்றும் அங்கத்தவர்கள் ஆகியோர் தங்கள் கலந்துரையாடலின் போது பல விடயங்களைத் தெரிவித்தனர். அப்போது மேயர் ஜோன் ரோரி மின்சார வாரியத்தை இயக்கும் நிர்வாகிகள் ஒரு நல்ல பணிகளைச் செய்வார்கள் என்று தான் நம்புவதாகக் கூறினார், ஆனால் நகரசபை ஒரு விளக்கத்தைக் கேட்பது "நியாயமானதும் செல்லுபடியாகும்" என்பதும் "எமது மின்சார வாரியம் எவ்வாறு நகரசபையின் தீர்மானங்களின் படி, பொதுவாக நிறுவப்பட்ட" கொள்கைகளுக்குள் கட்டுப்படாமல் இருக்கிறது" என்று முடியாது…" என்று கேள்வி எழுப்பினார்
மேலும் தொற்றுநோய் பரவலின் போது மின்சார வாரியத்தின் நிர்வாக இழப்பீட்டை சரிசெய்ய மின்சார வாரியம் முயற்சி எடுக்கவில்லை என்று பல நகரசபை அங்கத்தவர்கள் கேள்விகளால் மேயர் ஜோன் ரோரியை திணறடித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வெளியீடும் அறிமுகமும்

**நாளைக் குறித்துவைத்து நல்லாதரவு தாருங்கள்! 01-08-2021**

**இரண்டு நூல்களின் வெளியீடு:**
1. **யோகா தரும் நன்மைகள்** ***(Tamil)***
2. **Guide book for Yoga Students Q & A (English)**

**ஆசிரியர்: யோகா அருள்சுப்பிரமணியம் M. Sc. in Yoga**

**அனைவரையும் இந்த மெய்நிகர் நிகழ்விற்கு அன்புடன் அழைக்கிறோம்.**

**நாள்:** ஆகஸ்ட் 1ம் நாள் ஞாயிறு (01-08-2021)
**நேரம்:** காலை 10:00 மணி (கனடா)
**நிகழ்வு: Zoom வழி மெய்நிகர் நிகழ்வாக நடைபெறும்**
**Zoom ID: 6477066123**
**ஆதரவிற்கு நன்றி.**
**அன்புடன்,**
**யோகா. அருள்சுப்பிரமணியம்.** *M. Sc.in Yoga*
*Thamil Poonka School*
*3001 Markham Road # 21*
*Scarborough, ON M1X 1L6*
*Canada.*



# இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ள பெரும்பான்மையின கல்வியாளர்களும் வர்த்தகர்களும்

இலங்கையில் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைகளால் தொடர்ந்து அங்கு வாழ முடியாத நிலை தோன்றும் என்று எண்ணியுள்ள பெரும்பான்மையின கல்வியாளர்களும் வர்த்தகர்களும் இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய கோட்டாபாய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து 600,000க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் குறிப்பாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள் ஆகியவற்றை நாடிச் செல்வதாகவும் அங்கு தங்களுக்கான விசாக்களுக்கு விண்ணப்பித்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இந்த தகவல்கள் இலங்கையின் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தனவும் ஊடகங்கள் மத்தியில் தெரிவித்துள்ளார். ஏற்கெனவே இது தொடர்பான தகவல்கள் வெளிநாட்டு தூதரங்களில் பணியாற்றும் இலங்கையர்களால் கசியப்பெற்றுள்ள இந்த நேரத்தில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய போது, முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தனா இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், "விசாக்களுக்கு விண்ணப்பிக்கும் இலங்கையர்களின் சதவீதம் அண்மைய காலங்களில் மிகப் பெரிய அளவில் அதிகரித்ததுள்ளமை இதுவே முதல் முறையாகும். முன்னர் இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் யுத்தம் காரணமாகவும் இராணுவ கெடுபிடிகள் காரணமாகவும் வெளிநாடுகளை நாடிச் சென்றார்கள் தற்போது பெரும்பான்மை இன மக்கள் இவ்வாறு விரும்புகின்றார்கள். அவர்களில் விசாக்களுக்கு விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலோர் சிங்கள பௌத்தர்கள் என்பதும், அறிஞர்கள், கல்வியாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் தொழில் வல்லுநர்கள் இதில் அடங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

விசா வழங்கல் சேவைகளால் உறுதிப்படுத்தப்பட்டபடி, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு செல்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளன என்பதும் தற்போது கசிந்துள்ளது.

முன்னாள் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் " அரசாங்கம் நிலையான ஒரு ஆட்சியை நடத்தவில்லை. இதனால் இதுபோன்ற நிலைமை நாட்டின் எதிர்காலத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தனா கூறினார்.









## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### வேலைக்கு ஆட்கள் தேவை

East end restaurant ஒன்றிற்கு முழு நேர வேலை ஆட்கள் உடனடியாக தேவை.
Wednesday to Sunday.
தங்குமிடம், உணவு, மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரவு அல்லது திங்கள் காலை drop off வசதிகள் வழங்கப்படும்.
Wages details will be discussed with the interested candidate.
**Call: (416) 294-7887**
for further details.

### House For Sale in Ratmalana Sri Lanka

Two storied house on 9.5 perches
300 meters from Galle Road.
Seaside.Maliban Junction.
Rs 20 million.
Please email cansri1986@gmail.com
**Call: 416 739 9107**

### அலுவலக வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய அலுவலகம் ஒன்றுக்கு பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை. போதிய ஆங்கில அறிவு, கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் மற்றும் அடிப்படை Book Keeping அனுபவம் ஆகியன அவசியம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
**416 732 1608**

### அவசர திருத்த வேலைகளுக்கு அழையுங்கள்

உங்கள் வீடுகளில் அல்லது வர்த்தக நிலையங்களில் அவசரமான மின்சார மற்றும் கட்டட திருத்த வேலைகளை (HANDY MAN) குறைந்த கட்டணத்தில் செய்து கொள்ள உடனே அழையுங்கள்.
**தொடர்புகளுக்கு யோகன்:**
**(647) 608-6210**

### வேலை வாய்ப்பு

PAINTERS WANTED
Nasser Painting Decorating
Facebook: Nasser Decorating & Painting
Email: spantexco1@gmail.com
**Phone: (226) 503-6119**
Name: Abdalnasser Muqedi

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
**VARUNAN:**
**(416) 894-6244**

### காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க வல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்ளம் வழங்கப்படும்.
**Call: (416) 701-0003**

### அறை வாடகைக்கு உண்டு

Eglinton / McCowan சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் (43 Blue Lagoon Crt) அறை வாடகைக்கு உண்டு.
Parking spot provided.
Close to GO Train, NoFrills, Walmart & many convenient stores.
Rent: $650 (Utilities included)
**Call: : (416) 235-6130**

### TUTORING AVAILABLE

French and English tutoring available. An Ontario Certified teacher is offering online tutoring to help you improve your writing, reading and speaking skills in French and/or English.
Prepare for next school year with a teacher who has experience with the Ontario curriculum.
Homework help and test preparation provided.
***Call: (416) 723-7287***

### CLEANING வேலைக்கு ஆள் தேவை

Mississauga வில் வெள்ளி, சனி தினங்களுக்கு மாலை நேரை cleaning வேலைக்கு ஆள் தேவை.
மேலும் விபரம் அறிய
**(647) 286-2340**
இற்கு தொடர்பு கொள்ளவும்.

### DZ DRIVERS WANTED

DZ driver wanted for GTA & surrounding areas.
**Call NATHAN:**
**(416) 520-1324**
Email: Sentax72@gmail.com

# கனடாவின் பேரி நகரில் இயற்கையின் கோரத் தாண்டவம்..

## வீடுகள் வர்த்தக நிலையங்கள் பலத்த சேதம். இலட்சக் கணக்கான டாலர் மதிப்புள்ள இழப்புக்கள்







கனடாவின் பேரி **(Barrie)** நகரில் நேற்று வியாழக்கிழமை மாலை நிகழ்ந்த கடும் சூறாவளியாகத் தோன்றிய இயற்கையின் கோரத் தாண்டவத்தால் பல வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியன பலத்த சேதத்துள்ளாகியன. அதனால் வீட்டுரிமையாளர்களுக்கும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் இலட்சக் கணக்கான டாலர் மதிப்புள்ள இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இந்த இயற்கையின் தாக்குதல்களால் ஏற்பட்ட ஆபத்தான நிலை காரணமாகவும் காற்றினால் வீசப்பட்ட மரங்கள் மற்றும் இரும்புத் தளபாடங்கள் தாக்கியதில் எட்டு பேர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் நேற்று பிற்பகல் பாரியின் தெற்கு முனையில் மேற்படி சூறாவளி தாக்கியதில் நான்கு பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று சிம்கோ பிராந்திய அவசரகால இயக்குனர் ஜே.சி. கில்பர்ட் கூறினார்.

“நாங்கள் ஒவ்வொரு இடத்தையும் சோதித்தோம் என்றும் தேடுதல் நடவடிக்கைகள் திருப்தி அடையும் வரை நாங்கள் சம்பவம் நடைபெற்ற இடங்களிலேயே இருப்போம்” என்றும் கில்பர்ட் கூறினார்.

மேற்படி சூறாவளியாகத் தோன்றிய இயற்கையின் கோரத் தாண்டவத்தின் விபரங்களை அறிய முற்பட்டபோது, சுமார் 50 வீடுகளுக்கு கணிசமான சேதம் இருப்பதாக கில்பர்ட் கூறினார்.

“பல கட்டடங்கள் கூட மிகக் கடுமையான சேதங்களைக் கொண்டுள்ளன” என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

“அப்பகுதியில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் சரிபார்க்கப்படுவதையும் அவர்களின் பாதுகாப்பும் உடல் நலனும் உறுதி செய்வதற்காக நாங்கள் பொலிஸ் மற்றும் தீயணைப்பு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறோம. இங்கேயே எமது பணிகள் முடியும் வரை நாம் பாதிக்கப்பட்டவர்களோடு இருப்போம் ” என்று சிம்கோ பிராந்திய அவசரகால இயக்குனர் ஜே.சி. கில்பர்ட் மேலும் கூறினார். இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

# கனடாவில் இஸ்லாமிய குடும்ப உறுப்பினர்கள் மீது மீண்டும் தாக்குதல் முயற்சி

கனடாவின் ஹமில்ரன் நகரத்தில் கடந்த திங்கட்கிழமை ஒரு இஸ்லாமிய குடும்ப உறுப்பினர்கள் மீது மீண்டும் ஒரு தாக்குதல் முயற்சி இடம்பெற்றுள்ளது. ஒரு இஸ்லாமிய குடும்பத்தின் தாயும் அவரது மகளும் மதரீதியான அவதூறுகளையும் அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டதைத் தொடர்ந்து குற்றச் செயலாக கருதப்பட்டு மேற்படி சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்ட 40 வயது நபர் ஒருவர் ஹமில்ரன் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

திங்கட்கிழமையன்று இரவு 9:30 மணியளவில் அன்காஸ்டர் மீடோவ்லேண்ட்ஸ் பகுதியில் ஒரு வாகன நிறுத்துமிடம் வழியாக 62 வயதுடைய தாய், மற்றும் 26 வயதுடைய மகள், ஆகியோர் நடந்து கொண்டிருந்ததாகவும் அப்போது ஒரு வாகனம் ஒரு வாகனம் தரிக்கும் இடத்திலிருந்து வெளியேறிய மேற்படி தாயையும் மகளையும் துன்புறுத்தும் வகையில் பயமுறுத்தும் வகையில் ஆவேசத்துடன் மதரீதியான தீய வார்த்தைகளால் திட்டியவண்ணம் அங்கிருந்து விலகிச் சென்றதாகவும் பொலிஸ் அதிகாரிகள் கூறுகிறார்கள், மேற்படி தாக்குதல் சம்பவத்தில் தாய் மற்றும் மகள் இருவரில் சந்தேக நபர் கிட்ட நெருங்கி கிட்டத்தட்ட தாக்க முனைந்தார் என்றும் தெரிய வந்துள்ளது.

இஸ்லாமிய சமூகத்தை குறிவைத்து அவதூறுகளைப் பயன்படுத்தும் போது மேற்படி சந்தேச நபர் தாய் மற்றும் மகளுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

தாயும் மகளும் வீதியின் குறுக்கே ஓடிச் சென்று சில புதர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டதாகவும் அந்த சந்தேக நபர் அவர்களைத் தேடியதாகவும், பின்னர் புதர்களுக்கு கீழ் மறைந்திருந்த அவர்களைக் கண்டதும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் பொலீசார் ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

அப்போது அவர்களின் ஆபத்தான நிலையை கண்ட பெண்களில் ஒருவர் உதவிக்காக கத்திக்கொண்டு ஓடினார், அத்துடன் அருகில் சென்றுகொண்டிருந்த பொது மக்கள் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் அதில் தலையிட்டனர். அதனைத் தொடர்ந்து அந்த சந்தேக நபர் அங்கிருந்து வேகமாக விலகிச் சென்றார் எனவும் கான்ஸ்ட். போலீஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்

மேற்படி விடயமாக, கனேடிய முஸ்லிம்களின் தேசிய கவுன்சில் கனடாவின் தேசிய தொலைக்காட்சிக்கு வழங்கிய செய்தியில் இந்த சம்பவத்தால் மிகுந்த வருத்தமடைந்துள்ளதாகவும், சம்பவம் நடைபெற்றபோது, அந்த தாயும் மகளும் ஹிஜாப் அணிந்திருந்ததாகவும்,இதனைக் கண்ட அந்த சந்தேக நபருக்கு ஆத்திரம் மேலிட்டிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.



# முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொண்ட சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் கனடாவிற்குள் நுழைய விரைவில் அனுமதி

## — பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ மொன்றியாலில் தெரிவிப்பு

“அமெரிக்கா உட்பட வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு விருப்பத்தோடு வருபவர்களில், முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொண்ட சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் மட்டுமே கனடாவிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். இது பற்றிய அறிவிப்புக்கள் விரைவில் விடுக்கப்படும்”.

இவ்வாறு கனடாவின் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று வியாழக்கிழமை மொன்றியாலில் இடம் பெற்ற அரச நிகழ்வு ஒன்றில் தெரிவித்தார். முழுமையாக தடுப்பூசி போட்டவர்கள் கனடாவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவது குறித்து அடுத்த வாரம் ஒரு அறிவிப்பு எதிர்பார்க்கப்படுகிறது என்று பிரதமர் மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் மற்றும் வணிகர்கள் எப்போது கனடாவுக்குள் நுழைய முடியும் என்பதில் தான் தெளிவாக இருப்பதாகத் தெரிவித்த பிரதமர் அதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்வதாகவும் தெரிவித்தார்,

கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான தற்போதைய எல்லை மூடல் ஒப்பந்தம் புதன்கிழமை காலாவதியாகிறது. அந்த கட்டுப்பாடுகளை அடுத்த மாதாந்திர புதுப்பித்தலில் அதன் விதிமுறைகளை மாற்றுவதற்கான கோரிக்கைகள் தொடர்ந்து விடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கனடாவில் தடுப்பூசி போடும் வேகத்தில். இருப்பினும், ஜூலை 21 முதல் பெரிய மாற்றங்கள் எதுவும் நடைமுறைக்கு வராது என்று எதிர்பார்க்கப்படுகிறது, இருப்பினும் சில சிறிய மாற்றங்கள் செய்யப்படலாம்

அதற்கு பதிலாக, புதிய அணுகுமுறையைப் பற்றிய அறிவிப்பு எதிர்வரும் திங்களன்றோ அல்லது - பின்னர் ஒரு திகதியில் மாற்றங்களைத் தொடர்ந்து கொண்டு வரும் என்றும் பல அதிகாரிகள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

”எவ்வாறாயினும், கனடியர்கள் ஆர்வமாகவும் துடிப்போடும் உள்ளார்கள் குறிப்பாக உள்நாட்டு சூழலிலும், குடும்ப உறுப்பினர்களை மீண்டும் பார்க்கவும் பயணிக்கவும் முடியும் என்பதை அவர்கள் விரும்புகின்றார்கள். அதனை நாம் அங்கீகரிக்கிறோம்” என்றும் கனடியப் பிரதமர் கூறினார்.

# இலங்கையில் இலக்கு வைக்கப்படும் தமிழ் ஊடகவியலாளர்கள்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)




**ச**ரியாக ஆறு மாதங்களுக்கு முன்னர் ஐ நா மனித உரிமைகள் ஆணையரிடமிருந்து இலங்கையில் நி-லவும் சூழல்கள் குறித்து கடுமையாக விமர்சித்து அறிக்கை ஒன்று வெளியா-னது. அரசால் முன்னெடுக்கப்படும் துன்புறுத்தல்களும் அட்டூழியங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை வலியுறுத்தியது.

"இலங்கையில் மனித உரிமை செயல்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தார் ஆகியோர் மீது அரசு அல்லது அரசின் அங்கமாக இருக்கும் அமைப்புகள் மூலம் முன்னெடுக்கும் அனைத்து வகையான கண்காணிப்பு, அச்சுறுத்தும் விஜயங்கள், துன்புறுத்தல்கள் ஆகியவற்றை உடனடியாக நிறுத்தி, சிவில் சமூகத்தின் நியாயமான நடவடிக்கைகளுக்கு சட்டரீதியான தடைகள் விதிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் ஆ-ணையர் வலியுறுத்துகிறார்" என்று அந்த அறிக்கை கூறியது.

ஆனால், ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் ஆணையர் மிஷேல் பஷாலே அம்மையார் கூறியதிலிருந்த குறிப்பு மற்றும் கருத்தை உள்வாங்கிக் கொண்டு, அந்த அறிக்கையில் கூறியுள்ளவற்றைக் கடைப்பிடித்து நாட்டை மேலும் அவமானம் மற்றும் தனிமைப்படுத்தலிருந்து காப்பாற்றி நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு பதிலாக - ஐ நா அறிக்கைக்கு நேர்மாறாக நடக்கிறது.

ஐரோப்பிய நாடாளுமன்றம், சர்வதேச சமூகம், கொடையாளி நாடுகள், ஐ நா மனித உரிமைகள் ஆணையம் என்று யார் கூறுவதையும் தாங்கள் கேட்க மாட்டோம், அவர்கள் கூறுவது எதுவும் தம்மைக் கட்டுப்படுத்தாது, யாருடைய பேச்சையும் கேட்க வேண்டிய அவசியம் தமக்கு இல்லை, "அனைத்தும் யாம் அறிவோம்" எனும் போக்கில் இலங்கை அரசு ஆபத்தான ஒரு பாதையில் தொடர்ந்து பயணிக்கிறது.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் - குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் - தொடர்ந்து அரசின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றனர். பல செய்தியாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர், காணாமல் போயினர், கடத்தப்பட்டனர் அல்லது மாயமாயினர். அவர்கள் அனைவரும் மோசமான மனித உரிமை மீறல்கள், ஊழல்களை வெளிப்படுத்தி சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்கள் அல்லது பொதுவாகப் பாரபட்சமின்றி செய்திகளை வெளியிட்டவர்கள். இதில் தெரிந்தே கொல்லப்பட்டவர்கள்.



மயில்வாகனம் நிமலராஜன், ஐயாதுரை நடேசன், சிவராம், லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்நெலிகொட என்று இந்தப் பட்டியல் நீளும். விசாரணைகள், குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன்னர் நிறுத்தப்படுவது ஆகியவை காணல் நீர். அதை எதிர்பார்ப்பது யதார்த்தமானது அல்ல என்பது உலகறிந்த விஷயம்.

"துரத்தும் சிங்கம்"

இயல்பாகவே சிங்கத்திற்கு ஒரு குணம் உண்டு. அனைவரும் தம்மைக் கண்டு அஞ்ச வேண்டும் என்கிற அந்த மேலாதிக்க எண்ணம் காரணமாக தேவையுள்ளதோ இல்லையோ காட்டிலுள்ள விலங்குகளை அச்சுறுத்தி எப்போதும் அடக்கி ஆள வேண்டும் என்று நினைப்பதே அந்த குணம். ஆனால் இறுமாப்பு கொண்ட சிங்கங்கள் காட்டெருமைகளால் தூக்கி வீசப்படுவது அடிக்கடி நடக்கும், ஆனால் சிங்கம் மீண்டும் மீண்டும் செய்த தவற்றையே செய்து கூட்டம் சேர்ந்து "குடும்ப ஆட்சியை" முன்னெடுத்து தனது இருப்பை நிலைநிறுத்தி கொள்ளும்.

அதேபோன்று இலங்கை அரசு தனது தொடர்ந்து துன்புறுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக மக்களின் உரிமைகள் மற்றும் நிய-ாயமான விஷயங்களுக்காக குரல் கொடுக்கும் தமிழ் ஊடகவியலாளர்களை உப்புசப்பில்லாத காரணங்க்ளுகாக விரட்டி துரத்தித் துன்புறுத்தப்படுவது நடைபெறுகிறது.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் ஊடகவியலாளர்கள் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிசாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். விசாரணைக்காக என்று கூறி அவர்கள் அழைக்கப்பட்ட காரணங்கள் சட்டத்தின் முன்னர் செல்லுபடியாகாது என்று மூத்த சட்டத்தரணிகள் கூறுகிறார்கள்.

செய்தியாளர் செல்வராசா நிலாந்தன் இப்போது செயல்பாட்டில் இல்லாத தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பிலிருந்தார் என்று கூறப்பட்டு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். 2009 ஆம் ஆண்டு மே மாதம் "விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டனர்" என்று கூறி அரசு மார்த்தட்டக் கொண்டது. ஆனாலும் போர் முடிந்து 12 ஆண்டுகளுக்கு பிறகும் அந்த அமைப்புடன் தொடர்பு உள்ளதா என்று கேட்டு ஊடகவியளார்களும் மற்றவர்களும் தொந்தரவு செய்யப்படுவது வாடிக்கையாகி வருகிறது.

விசாரணைக்கென்று அழைக்கப்பட்ட நிலாந்தனிடம் அவருக்கு "விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த தயாமோகனுடன் தொடர்பிருந்ததா? பட்டி நாதம் மற்றும் மீனகம் இணையதளத்தை நடத்துவதில் ஈடுபட்டாரா" என்பது உட்பட பல விஷயங்கள் துருவித்துருவிக் கேட்கப்பட்டன. மூன்று மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்த விசாரணையில் அவரது சமூக ஊடகத் தகவல்கள், வங்கிக் கணக்குகள், கடவுச் சொற்கள் ஆகியவை கேட்டு, மிரட்டிப் பெறப்பட்டுள்ளன.

"நீங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரா? உங்கள் உறவினர்கள் யாராவது விடுதலிப் புலிகளின் இருந்தார்களா? நீங்கள் புலிகளுக்கு உதவியுள்ளீர்களா? அவர்களுக்கும் உங்களுக்குமான தொடர்பு என்ன?" என்று அவரிடம் ஏராளமான கேள்விகள் கேட்கப்பட்டன. அவர் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன.

நிலாந்தனிடம் அவர் அரசு சாரா அமைப்பு ஏதாவது நடத்துகிறாரா- ஆம் என்றால் அதற்கு நிதியுதவி எங்கிருந்து வருகிறது, அவரது ஊடகப் பணி என்ன என்றும் விசாரணையில் கேட்கப்பட்டுள்ளது.

அவர் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலராகவும் சுதந்திர ஊடகவியலாளராகவும் செயல்படுகிறார்.

அஞ்சலி, அச்சுறுத்தல், அராஜகம்

இந்த மாதத்தின் முற்பகுதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த மற்றொரு தமிழ் ஊடகவியலாளர் சசிகரன் புண்ணியமூர்த்தி "நான்காம் மாடி" அதிகா-ரிகளால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். காரணம் - இந்தாண்டு ஜனவரி மாதம் இலங்கை கடற்படையால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இந்திய மீனவர்களுக்கான அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்றார் என்று கூறப்படுவது.

ஆனால் அந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை இந்தியா அல்லது இலங்கைத் தரப்பில் எவ்வித விசாரணைகளும் இல்லை. நடுக்கடலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அந்தச் சம்பவத்தில் "மர்மமான சூழலில்" தீ பிடித்து மூழ்கியது. அதில் கருகிப் போயிருந்த நான்கு இந்திய மீனவர்களின் உடல்கள் பின்னர் மீட்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டது. அத்துடன் அந்த விஷயம் "ஆழமா-கப் புதைக்கப்பட்டது".



"நான் ஒரு ஊடகவியலாளர் எனும் வகையில் அந்த கூட்டத்தில் பங்குபெற்றேன். ஆனால் நானே அந்த கூட்டத்தை ஏற்பாடு செய்ததுபோல் என்னை விசாரித்தார்கள்" என்று சசி உள்ளூர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தான் நாட்டிற்கு எதிராக எதையும் செய்யவில்லை என்று கூறும் சசி, "ஊடகவியலாளர்கள் எனும் போர்வையில் சிலர் அரசுக்கு எதிராகச் செயல்படுகின்றனர் என்று கூறி என்னை விசாரித்தனர்" என்கிறார்.

தமிழ் ஊடகவியலாளர்கள் அடிக்கடி விசாரணை என்கிற பெயரில் அழைக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதை மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர்கள் சங்கம் கண்டித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முருகுப்பிள்ளை கோகுலதாசன் எனும் ஊடகவியலாளர் இப்போது 225 நாட்களுக்கு மேலாக பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிசார் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் விடுதலைப் புலிகளின் படங்களை சமூக ஊடகங்களில் பதிவு செய்தார் என்பது அவர் மீதான குற்றச்சாட்டு. செய்தியாளர்களை மௌனிக்கச் செய்ய பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒரு ஆயுதமாக அரசு பயன்படுத்தி வருகிறது எனும் குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது.

அந்த சமயத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட எல்லைகளில்லா ஊடகவியலாளர்கள் அமைப்பு ஆர் எஸ் எப், அவர் ஆண்டு தோறும் தமிழ்ச் சமூகம் நவம்பர் மாதம் அனுசரிக்கும் ஒரு நிகழ்வுக்கான ஒரு குறிப்பை மட்டுமே சமூக ஊடகங்களில் பகிர்ந்தார் என்று கூறி அவரது கைதை கண்டிருந்தது.

"அபத்தமான குற்றச்சாட்டுக்கள்"

"முருகுப்பிள்ளை கோகுலதாசனின் கைதும், தொடர்ந்து அபத்தமான குற்றச்சாட்டின் கீழ் அவர் தடுத்து வைத்திருப்பதும் ஊடக சுதந்திரத்தை திட்டமிட்டு ஒடுக்கும் செயல்" என்று அந்த அமைப்பின் ஆசிய - பசிபிக் பகுதிக்கான தலைவர் டானியேல் பஸ்டார்ட் அப்போது கூறியிருந்தார்.

"இலங்கையின் சட்ட மாஅதிபரை அவரை உடனடியாக நிபந்தனைகள் இன்றி விடுவிக்க நாங்கள் வலியுறுத்துகிறோம். தமிழர்கள் நலனுக்காக, அவர்களின் பிரச்சனைகளுக்காக நேரடியாகவோ மறைமுகமாகவோ அதைச் செய்திகளாக எழுதியோ அல்லது வெளியிடும் செய்தியாளர்களை பாதுகாப்பு படையினர் அச்சுறுத்தி துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும்".

இந்தாண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முகுந்தன் திவன்யா மற்றும் விமல் ராஜ் என்கிற இரு சமூக ஊடகச் செய்தியாளர்கள் கைது செய்யப்பட்டு இன்று வரை வெளியுலகத் தொடர்புகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் நடத்தி வந்த "டியூப் தமிழ்" யூடியூப் ஊடகம் கூறுகிறது. அந்த ஊடகத்தில் அவர்கள் அரசுக்கு எதிரான செய்திகளைப் பரப்பினார்கள் என்று அரச தரப்பு குற்றஞ்சாட்டியது.

கடந்த மே மாதம் மட்டக்களப்பு கடற்கரையின் கொடூரமாக முடிவடைந்த உள்நாட்டு யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் வகையில் மெழுகுவர்த்திகளை ஏற்றிய பத்துபேர் கைது செய்யப்பட்டு இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.



தமிழர்களின் நிலை, சிறுபான்மையினரின் பிரச்சனைகள், ஆட்கடத்தல் போன்ற புலனாய்வு செய்திகள் மட்டுமின்றி வடக்கு கிழக்குப் பகுதிக-ளில் அன்றாடம் நடக்கும் செய்திகளைக் கூட பாரபட்சமின்றி, ஆதாரங்களுடன் வெ-ளியிடுவது ஆபத்து நிறைந்த ஒன்றாக மாறி வருகிறது என்ற கவலைகள் அதிகரித்து வருகின்றன.

அப்படியான செய்திகளை வெளியிடுபவர்கள் இரண்டு ஆபத்துக்களை எதிர்கொள்கிறார்கள். ஒன்று "சட்டரீதியாக" விசாரணைக்கு என்று பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டு "முறையான விசாரணைக்கு" பின்னர் கைது எனும் நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். மாறாகக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு, அவர்களின் புகார்களைப் பதிவு செய்ய பொலிசார் மறுப்பார்கள்.

எப்படிப் பார்த்தாலும், "அரச" பயங்கரவாதம் மீண்டும் திரும்பியுள்ளது!

# புதுச்சேரியில் குழந்தைகளுக்கு கரோனா பாதிப்பு: முழுமையான ஆய்வறிக்கை அளிக்க அதிகாரிகளுக்கு ஆளுநர் தமிழிசை உத்தரவு



புதுச்சேரியில் குழந்தைகளுக்கு கரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள நிலையில், ஒவ்வொரு நிமிடம் கவனமாகவும், எச்சரிக்கையாடும் இருக்க வேண்டும். முழுமையான தகவல் அடங்கிய ஆய்வறிக்கையை அளிக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆளுநர் தமிழிசை தெரிவித்துள்ளார்.புதுச்சேரியில் கரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் தொடர் முயற்சியாக 20வது வாராந்திர கரோனா மேலாண்மை சீராய்வுக் கூட்டம் இன்று (ஜூலை 15) நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற கூட்டத்துக்குத் துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தலைமை தாங்கினார்.

தலைமைச் செயலர் அஸ்வனி குமார், போலீஸ் டிஜிபி ரன்வீர்சிங் கிருஷ்ணியா, வருவாய்த்துறைச் செயலர் அஷோக்குமார், உள்ளாட்சித் துறைச் செயலர் வல்லவன், செய்தித்துறைச் செயலர் உதய்குமார், சுகாதாரத்துறைச் செயலர் அருண், துணைநிலை ஆளுநரின் செயலர் அபிஜித் விஜய் சவுதரி, சுகாதாரத்துறை இயக்குநர் மோகன்குமார், தேசிய சுகாதார இயக்கத் திட்ட இயக்குநர் ஸ்ரீராமலு, மாநில கரோனா மேலாண்மைப் பொறுப்பு அதிகாரி ரமேஷ், உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி சாயிராபானு மற்றும் ஜிப்மர், தனியார் மருத்துவக் கல்லூரிகளின் அதிகாரிகள், பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சுகாதாரத்துறை இயக்குநர் புதுச்சேரியில் கரோனா நிலவரம், மூன்றாவது அலையை எதிர்கொள்ள அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள், கருப்புப் பூஞ்சை நோய், தடுப்பூசி குறித்துப் படக்காட்சி மூலம் விளக்கினார்.தொடர்ந்து கூட்டத்தில் துணைநிலை ஆளுநர் தமிழிசை பேசியதாவது:''புதுச்சேரியில் 21 குழந்தைகள் கரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கும் செய்தி கவலை அளிக்கிறது. அதனால் ஒவ்வொரு நிமிடமும் நாம் கவனமாகவும், எச்சரிக்கையோடும் செயல்பட வேண்டும்.குழந்தைகள் கரோனாவால் பாதிக்கப்படுவது குறித்த முழுமையான தகவல் அடங்கிய ஆய்வறிக்கையை அளிக்க வேண்டும்.

சூழ்நிலையைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். ஒருவேளை குழந்தைகளைத் தாக்கினால் எதிர்கொள்வதற்கான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்கெனவே செய்யப்பட்டிருப்பது குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க பெரிதும் உதவுகிறது.கரோனா கட்டுக்குள் இருந்தாலும் எந்த நேரத்திலும் மூன்றாவது அலை தாக்கலாம் என்ற எச்சரிக்கை உணர்வோடு அனைவரும் செயல்பட வேண்டும். தடுப்பூசியால் புதுச்சேரி வேகமாக முன்னேறி வருகிறது.

ஆனாலும், ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாளர்களை நியமித்து தீவிரமாகத் தடுப்பூசி செலுத்துவதை மேற்கொள்ள வேண்டும்.குழந்தைகளை வெளியில் கூட்டிச் செல்வதும், உறவினர்களை வீட்டிற்கு அழைப்பதையும் தவிர்க்க வேண்டும் என்று பெற்றோர்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அனைத்துக் குழந்தை நல மருத்துவர்களும், பொதுநல மருத்துவர்களும், குழந்தைகளுக்குத் தொற்று ஏற்படுகிறதா என்பதைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிறப்பான சிகிச்சைகள் அவர்களை அபாயக் கட்டத்தில் இருந்து காப்பாற்றியிருக்கிறது. அனைவரும் இணைந்து கரோனாவைக் கட்டுப்படுத்துவதில் தீவிரமாக இயங்க வேண்டும். பொருளாதார பாதிப்புகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் தளர்வுகள் அறிவிக்கப்படுகின்றன என்பதையும் முழு கவனத்தில் கொண்டு எப்பொழுதும் கரோனா தடுப்பு நடவடிக்கைகளில் பின்பற்ற வேண்டும்.ஒவ்வொரு வாரமும் நடைபெறும் சீராய்வுக் கூட்டம் கரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டம் வகுக்கவும், அவற்றை முன்னெடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசனைகள் பெறவும் பெரிதும் உதவியாக இருக்கிறது.'' இவ்வாறு ஆளுநர் தமிழிசை தெரிவித்தார்.

# தென்னாப்பிரிக்கக் கலவரம்; தமிழர்களைக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: அன்புமணி

இந்தியா சார்பில் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை அனுப்பி தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு எதிராகக் குறிவைத்து நடத்தப்படும் கலவரத்தை ஒடுக்கும்படி மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என, பாமக இளைஞரணித் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார் .இது தொடர்பாக, அன்புமணி ராமதாஸ் இன்று (ஜூலை 15) வெளியிட்ட அறிக்கை:

"தென்னாப்பிரிக்காவில், அந்நாட்டின் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜூமா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டில் வெடித்துள்ள கலவரம் கட்டுக்கடங்காமல் பெருகிக் கொண்டிருக்கிறது. இந்தக் கலவரங்களின்போது தமிழர்களும், அவர்களின் உடைமைகளும் தாக்கப்படுவது அதிர்ச்சியளிக்கிறது. தென்னாப்பிரிக்க அதிபராக 200918 காலத்தில் பணியாற்றிய ஜேக்கப் ஜூமா மீதான ஆயுத பேர ஊழல் வழக்கின் விசாரணைக்காக நீதிமன்றத்தில் நேர் நிற்கத் தவறியதற்காக அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டு, அந்த வழக்கில் அவருக்கு 15 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி, ஜேக்கப் ஜூமா கடந்த வாரம் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.அவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, அவரது ஆதரவாளர்கள் நடத்திய போராட்டங்களில் வெடித்த வன்முறை கலவரமாக மாறியிருக்கிறது.

அடுத்தடுத்த நாட்களில் கலவரம் கட்டுக்குள் கொண்டுவரப்படும் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்த வேளையில், நாளுக்கு நாள் கலவரம் அதிகரித்து வருகிறது.கடந்த ஒரு வாரமாகத் தொடரும் கலவரத்தில் 72 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர். தென்னாப்பிரிக்கக் கலவரத்தில் கவலையளிக்கும் விஷயம் என்னவெனில், அங்குள்ள தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்களும், அவர்களின் வணிக சொத்துகளும் குறிவைத்துத் தாக்கப்படுகின்றன என்பதுதான். இதைத் தடுக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தென்னாப்பிரிக்காவின் இரண்டாவது பெரிய நகரமான டர்பனைத் தலைநகரமாகக் கொண்ட கவாசூலு நாடால் மாகாணம் தான் ஜேக்கப் ஜூமாவின் சொந்த மாநிலமாகும்.

அந்த மாநிலத்தில்தான் மிக அதிக அளவில் கலவரங்கள் நடைபெற்று வருகின்றன. அம்மாநிலத்தில் உள்ள சாட்ஸ்வொர்த், ஃபோனிக்ஸ், டோன்காட், பாம்வியூ, சாஸ்திரி நகர் உள்ளிட்ட பகுதிகளில் மிக அதிக அளவில் கலவரங்கள் நடந்து வருகின்றன. அங்குள்ள தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்களின் வணிக நிறுவனங்களும் வீடுகளும் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றன. இதனால் அங்குள்ள இந்தியர்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்கள் மீதான தாக்குதலைத் தடுக்கும்படி, தென்னாப்பிரிக்க வெளியுறவு அமைச்சரை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தொடர்புகொண்டு பேசிய பிறகும் கலவரம் தொடர்வதுதான் கவலையளிக்கிறது.

தென்னாப்பிரிக்காவில் எப்போது கலவரம் வெடித்தாலும், அதனால் அதிக அளவில் பாதிக்கப்படுவது இந்தியர்கள்தான். கவாசூலூ நடால் உள்ளிட்ட தென்னாப்பிரிக்காவில் பல மாநிலங்களில் இந்தியர்கள் வணிக ரீதியாக வலிமையாக இருப்பதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்தான் இத்தகைய தாக்குதல்களை அங்குள்ள சிலர் தூண்டிவிடுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.தென்னாப்பிரிக்காவின் விடுதலைப் போராட்டம், இனவெறிக்கு எதிரான போராட்டம், தென்னாப்பிரிக்க விவசாயம் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட அனைத்திலும் இந்தியர்களின் பங்கு, குறிப்பாகத் தமிழர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதற்காகக் கொண்டாடப்பட வேண்டியவர்கள் குறிவைத்துத் தாக்கப்படுவது மிகவும் வேதனையளிக்கிறது.

இந்த நிலை இனியும் தொடரக் கூடாது.இந்தியா சார்பில் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை அனுப்பி இந்தியர்களுக்கு எதிராகக் குறிவைத்து நடத்தப்படும் கலவரத்தை ஒடுக்கும்படி தென்னாப்பிரிக்காவிடம் மத்திய அரசு வலியுறுத்த வேண்டும். அங்குள்ள தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்வதை உறுதி செய்ய வேண்டும்". இவ்வாறு அன்புமணி தெரிவித்துள்ளார்.

# ரியல் ஹீரோவாக இருங்கள்; கார் இறக்குமதி வரி கட்டாத நடிகர் விஜய்க்கு உயர் நீதிமன்றம் அறிவுரை: ரூ.1 லட்சம் அபராதம்



ரோல்ஸ் ராய்ஸ் காருக்கு இறக்குமதி வரிகட்ட மறுத்து நீதிமன்றத்தை அணுகிய நடிகர் விஜய்க்கு உயர் நீதிமன்றம் ரூ.1 லட்சம் அபராதம் விதித்து மனுவைத் தள்ளுபடி செய்தது. வரி என்பது பங்களிப்பு, அது நன்கொடையல்ல என நீதிபதி அறிவுறுத்தினார். தமிழ் சினிமாவில் பிரபல நடிகர் விஜய் 2012ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இருந்து ரோல்ஸ் ராய்ஸ் ஹோஸ்ட் என்ற சொகுசு காரை இறக்குமதி செய்தார். இந்த காருக்கு சுங்க வரி செலுத்தியுள்ளார்.

ஆனால், நுழைவு வரி செலுத்தாததால் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் காரைப் பதிவு செய்வதற்கான அனுமதியை வழங்கவில்லை.இந்நிலையில் நடிகர் விஜய் இறக்குமதி செய்த காருக்கு நுழைவு வரி செலுத்த வணிக வரித்துறை உதவி ஆணையர் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருந்தார். இந்த உத்தரவை எதிர்த்தும் வரி விதிக்கத் தடை விதிக்கக் கோரியும் நடிகர் விஜய் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அவரது மனுவில், "காரை இறக்குமதி செய்ய சுங்கத்துறையிடம் சுங்க வரி செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் காரை வட்டாரப் போக்குவரத்துக் கழகத்தில் பதிவு செய்ய இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. அதன் காரணமாக காரைப் பயன்படுத்த முடியவில்லை. ஆகவே, நுழைவு வரி விதிக்கும் உத்தரவுக்குத் தடை விதிக்க வேண்டும்" என்று மனுவில் தெரிவித்திருந்தார்.இந்த வழக்கு உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம் முன் இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம், மனுதாரர் தான் எந்தத் தொழில் செய்கிறோம் என்பதை மனுவில் குறிப்பிடவில்லை எனக் கேள்வி எழுப்பினார்.

அப்போது நடிகர் விஜய் தரப்பில், தான் தமிழ் சினிமாவில் நடிகராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதைப் பதிவு செய்த நீதிபதி, புகழ் பெற்ற சினிமா நடிகர்கள் முறையாக, உரிய நேரத்தில் வரி செலுத்த வேண்டும், வரி வருமானம் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு எனவும் குறிப்பிட்ட நீதிபதி, வரி என்பது கட்டாயமாக வழங்க வேண்டிய பங்களிப்புதானே தவிர, தானாக வழங்கக்கூடிய நன்கொடை இல்லை எனவும் தெரிவித்தார்.மக்கள் செலுத்தக்கூடிய வரிதான், பள்ளிகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்றும், தமிழ்நாட்டில் நடிகர்கள் நாடாளும் அளவிற்கு வளர்ந்துள்ள நிலையில், அவர்கள் உண்மையான ஹீரோக்களாக இருக்க வேண்டுமே தவிர, ரீல் ஹீரோக்களாக இருக்கக் கூடாது என்றும் நீதிபதி அறிவுறுத்தினார்.

சமூக நீதிக்குப் பாடுபடுவதாக பிரதிபலிக்கும் நடிகர்கள், இதுபோன்ற வரி ஏய்ப்பு செய்வது ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், வரி ஏய்ப்பு என்பது தேசத்துரோகம் எனவும் குறிப்பிட்ட நீதிபதி, இறக்குமதி செய்யப்பட்ட காருக்கான வரியை 2 வாரங்களில் செலுத்த வேண்டும் என நடிகர் விஜய்க்கு உத்தரவிட்டார்.மேலும், நடிகர் விஜய்யின் மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்ட நீதிபதி, நடிகர் விஜய்க்கு 1 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து, அதை முதல்வர் கரோனா நிவாரண நிதிக்கு இரண்டு வாரத்தில் வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்.

# எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்ற படிக்காத மேதை, பாரத ரத்னா காமராசர் பிறந்த தினம்



காமராசர் (காமராஜர்) ஜூலை 15, 1903ல் விருதுநகரில் பிறந்தார். பெற்றோர் குமாரசாமி நாடார் மற்றும் சிவகாமி அம்மாள் ஆவர். முதலில் இவருக்குக் குலத் தெய்வமான காமாட்சியின் பெயரையே முதலில் சூட்டினார்கள். தாயார் சிவகாமி அம்மாள் மட்டும், அவரை "ராசா" என்றே அழைத்து வந்தார். நாளடைவில் காமாட்சி என்ற பெயர் மாறி, "காமராசு" என்று ஆனது. தனது பள்ளிப் படிப்பைச் சத்ரிய வித்யா சாலா பள்ளியில் தொடங்கினார். படிக்கும் போதே மிகவும் பொறுமையுடனும் விட்டுக் கொடுக்கும் மனத்துடனும் விளங்கினார். சிவகாமி அம்மாளுக்கு இரண்டு சகோதரர்கள். ஒருவர் கருப்பையா நாடார். இவர் துணிக்கடை வைத்திருந்தார். மற்றொருவர் பெயர் காசிநாராயண நாடார். இவர் திருவனந்தபுரத்திலே மரக்கடை வைத்து நடத்தி வந்தார். பள்ளிப்படிப்பைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டதும் காமராசர் தன் மாமாவின் துணிக்கடையில் வேலையில் அமர்ந்தார். அங்கிருக்கும்போது பெ. வரதராசுலு நாயுடு போன்ற தேசத் தலைவர்களின் பேச்சுக்களில் கவரப்பட்டு அரசியலிலும் சுதந்திரப் போராட்டங்களிலும் ஆர்வம் காட்டினார். தன்னுடைய 16ஆம் வயதில் காங்கிரசின் உறுப்பினராக ஆனார்.

ராஜாஜியின் தலைமையில் 1930 மார்ச் மாதம், வேதாரண்யத்தில் உப்பு சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டார். அதற்காகக் காமராசர் கைது செய்யப்பட்டு கல்கத்தா அலிப்பூர் சிறைக்கு அனுப்பப்பட்டார். அடுத்த ஆண்டு காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடுதலை ஆனார். விருதுநகர் வெடிகுண்டு வழக்கில் கைதாகி, சேலம் டாக்டர் பெ.வரதராசுலு நாயுடுவின் வழக்காடும் திறமையால் குற்றச்சாட்டு நிறுவப்படாததால் விடுதலை ஆனார். 1940ல் மீண்டும் கைதாகி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கிருக்கும் போதே விருதுநகர் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒன்பது மாதங்களுக்குப் பின் விடுதலை ஆனதும் நேராகச் சென்று தன் பதவி விலகினார். பதவிக்கு நேர்மையாக முழுமையாகக் கடமையாற்ற முடியாத நிலையில் அதில் ஒட்டிக் கொண்டிருப்பது தவறு என்பது அவருடைய கொள்கையாக இருந்தது. மீண்டும் 1942ல் ஆகஸ்ட் புரட்சி நடவடிக்கைகளுக்காகக் கைது செய்யப்பட்டார். இந்த முறை மூன்று ஆண்டுகள் தண்டனையாகப் பெற்றார்.



காமராசர், சிறந்த பேச்சாளரும் நாடாளுமன்றவாதியும் ஆன சத்தியமூர்த்தியைத் தன் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டிருந்தார். 1936ல் சத்தியமூர்த்தி பிரதேச காங்கிரசின் தலைவரான போது காமராசரைச் செயலாளராக ஆக்கினார். இருவரின் முயற்சியில் காங்கிரசு கட்சி நல்ல வளர்ச்சி கண்டு தேர்தல்களில் பெருவெற்றி பெற்றது. இந்தியா சுதந்திரம் அடைந்த செய்தி கேட்டுக் காமராசர் முதலில் சத்தியமூர்த்தியின் வீட்டுக்குச் சென்று அங்குதான் தேசியக் கொடியை ஏற்றினார். 1953-க்குப் பிறகு சக்ரவர்த்தி ராஜாஜிக்கு அவர் கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தால் அதிக அளவில் எதிர்ப்புகள் கிளம்பி இருந்த நேரம். காமராசர் ஆட்சித் தலைமைப் பொறுப்புக்கு வரத் தயங்கியதற்கு அவருக்கிருந்த மொழிவளம் குறித்த தாழ்வுணர்ச்சி ஒரு முக்கிய காரணம். அப்போது தமிழகம் சென்னை ராச்சியமாக ஆந்திராவின் பெரும்பகுதி, கர்நாடகாவின் சில பகுதிகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

குலக்கல்வித் திட்டத்தால் ராஜாஜியின் செல்வாக்கு வேகமாகக் கீழிறங்கிக் கொண்டிருக்க, மொழிவாரி மாநிலங்கள் அமைப்பின் காரணமாக அக்டோபர் 1, 1953ல் ஆந்திரா பிறந்து விட்டது. தமிழ்நாடும் சுருங்கிப் போக, காங்கிரசின் உள்ளேயே ராஜாஜிக்குப் பெரும் எதிர்ப்பு கிளம்பி விட்டது. நிலைமை அறிந்த கட்சி மேலிடம், தமிழக அளவில் தீர்மானித்துக் கொள்ள அனுமதி வழங்கி விட்டது. ராஜாஜி தான் அவமானப்படுவதைத் தவிர்க்க, "எனக்கு எதிராகக் கட்சியில் யாரும் தீர்மானம் கொண்டு வர வேண்டாம். நானே விலகிக் கொள்கிறேன்" என்று அறிவித்து விட்டாலும் தன் இடத்திற்குத் தன்னுடைய முக்கிய ஆதரவாளரான சி. சுப்பிரமணியத்தை முன்னிறுத்த பின் வேலை செய்தார். அவருடைய இன்னொரு முக்கிய ஆதரவாளரான எம். பக்தவத்சலம் அதனை முன்மொழிந்தார். ஆனால் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் காமராசர் பெருவாரியான வாக்குகள் முன்னணியில் வெற்றி பெற்றார். இதுதான், காமராசர் தமிழக முதல்வராக 1953 தமிழ்ப்புத்தாண்டு அன்று பதவியேற்றதன் பின்னணி.

காமராசர் அமைச்சரவை அமைத்த விதத்தில் சில நுட்பமான விஷயங்கள் இருந்தன. மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே 8 பேர் அமைச்சர்கள் இருந்தனர். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சி. சுப்பிரமணியம், அவரை முன்மொழிந்த எம். பக்தவத்சலம் இருவரையுமே அமைச்சரவையில் சேர்த்திருந்தார். அவருடைய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இன்னும் முக்கிய இருவர், ராமசாமி படையாச்சி, மாணிக்கவேலு நாயக்கர் ஆகியோர். இவர்கள் இருவரும் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டு தி.மு.க ஆதரவோடு வென்றவர்கள். 1952 தேர்தலில் தி.மு.க. போட்டியிடவில்லை என்றாலும் அது சில வேட்பாளர்களை வெளிப்படையாக ஆதரித்தது. அமைச்சரவையின் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம், பி. பரமேசுவரன் என்கிற அமைச்சர். அவருக்குத் தரப்பட்டிருந்த பொறுப்பு, தாழ்த்தப்பட்டோர் நலம் மற்றும் அறநிலையத் துறை. ராஜாஜி கொண்டு வந்திருந்த குலக்கல்வித் திட்டத்தினைக் கைவிட்டார்.

காமராசர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் பள்ளிகளின் எண்ணிக்கை 27,000 ஆனது. 1920ல் நீதிக்கட்சி அரசு ஆதரவுடன் சென்னை மாநகராட்சியில் மதிய உணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. முதலில் ஆயிரம் விளக்குப் பகுதியில் இருந்த ஒரு மாநகராட்சிப் பள்ளியில் காலை உணவுத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின் மேலும் நான்கு பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டமே 1960 களில் காமராசரால் அறிமுகப்படுத்தப்பட்டு எம்.ஜி. ராமச்சந்திரனால் 1980 களில் விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தின் முன்னோடியாகும். அவரது மதிய உணவுத் திட்டம் இன்று உலக அளவில் பாராட்டப்படும் திட்டமாகும். அதன் பலனாகப் பள்ளிகளில் படிப்போரின் எண்ணிக்கை 37 விழுக்காடாக உயர்ந்தது. (முன்னர் இது 7 விழுக்காடாக இருந்தது). பள்ளிகளில் வேலைநாட்கள் 180ல் இருந்து 200 ஆக உயர்த்தப்பட்டது. சென்னை இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் தொடங்கப்பட்டது.

காமராசர் முதலமைச்சராகப் பதவி வகித்த காலங்களில் நாட்டு முன்னேற்றம், நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றம், கல்வி, தொழில் வளத்துக்கு முன்னுரிமையளித்து பல திட்டங்களை நிறைவேற்றினார். அவரது ஆட்சியின் கீழ் 10 முக்கிய நீர்பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை பவானித்திட்டம், மேட்டூர் கால்வாய்த்திட்டம், காவேரி டெல்டா வடிகால் அபிவிருத்தி திட்டம், மணிமுத்தாறு, அமராவதி, வைகை, பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டம், சாத்தனூர், கிருசுணகிரி, ஆரணியாறு ஆகியவையாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மலை கிராமங்களுக்குக் குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்காகக் காமராசரால் கட்டப்பட்ட மாத்தூர் தொட்டிப் பாலம் ஆசியாவின் மிகப்பெரிய தொட்டிப்பாலமாக இன்றளவும் உள்ளது. அவர் காலத்தில் தமிழகத்தில் தொடங்கப்பட்ட முக்கிய பொதுத் துறை நிறுவனங்களும் பெருந்தொழிற்சாலைகளும், பாரத மிகு மின் நிறுவனம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், மணலி சென்னை சுத்திகரிப்பு நிலையம் (MRL இதன் தற்போதைய பெயர் CPCL), இரயில்பெட்டி இணைப்புத் தொழிற்சாலை (ICF), நீலகிரி புகைப்படச் சுருள் தொழிற்சாலை, கிண்டி மருத்துவ சோதனைக் கருவிகள் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை, குந்தா மின் திட்டமும், நெய்வேலி மற்றும் ஊட்டி ஆகிய இடங்களின் வெப்ப மின் திட்டங்களும் காமராசரால் ஏற்படுத்தப்பட்டவை.

காமராசர் முதல் அமைச்சரான முதல் ஆண்டிலேயே அனைத்துத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஓய்வு ஊதியம் வழங்க ஆணையிட்டார். பின்னர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அதன்பின்னர் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஓய்வு ஊதியம் வழங்கும்படி ஓய்வு ஊதியத் திட்டத்தை நீட்டித்தார். 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தமது சொந்த ஊரான விருதுநகர் தொகுதியில் பெ. சீனிவாசன் என்பவரால் 1,285 வாக்குகள் வேறுபாட்டில் தோற்கடிக்கப்பட்டார். நாகர்கோயில் மக்களவைத் தொகுதியில் 1969ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார். மூன்று முறை (1954-57, 1957-62, 1962-63) முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த காமராசர், பதவியைவிடத் தேசப்பணியும் கட்சிப்பணியுமே முக்கியம் என்பதை மக்களுக்கும் குறிப்பாகக் கட்சித் தொண்டர்களுக்கும் காட்ட விரும்பிக் கொண்டு வந்த திட்டம் தான் K-PLAN எனப்படும் "காமராசர் திட்டம்" ஆகும். அதன்படி கட்சியின் மூத்த தலைவர்கள் பதவிகளை இளையவர்களிடம் ஒப்படைத்து விட்டுக் கட்சிப்பணியாற்றச் செல்ல வேண்டும் என்று இவர் நேருவிடம் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டார் நேரு.

காமராசர் திட்டத்தை முன்மொழிந்த கையோடு தன் முதலமைச்சர் பதவியைப் பதவி விலகல் செய்து (2. அக்டோபர் 1963) பொறுப்பினை பக்தவத்சலத்திடம் ஒப்படைத்து விட்டு டெல்லி சென்றார் காமராசர். அக்டோபர் 9 அன்று அகில இந்தியக் காங்கிரசின் தலைவர் ஆனார். லால் பகதூர் சாசுதிரி, மொரார்சி தேசாய், எசு. கே. பாட்டில், செகசீவன்ராம் போன்றோர் அவ்வாறு பதவி துறந்தவர்களில் முக்கியமானவர்கள். அகில இந்திய அளவில் காமராசரின் செல்வாக்கு கட்சியினரின் மரியாதைக்குரியதாக இருந்தது. அதனாலேயே 1964ல் நேரு இறந்தவுடன் இந்தியாவின் தலைமை அமைச்சராக லால் பகதூர் சாசுதிரியை முன்மொழிந்து காமராசர் சொன்ன கருத்தினை அனைவரும் ஏற்றனர். 1966ல் லால் பகதூர் சாசுதிரியின் திடீர் மரணத்தின்போது ஏற்பட்ட அசாதாரண அரசியல் சூழ்நிலையின்போது இந்திரா காந்தியை தலைமை அமைச்சராக வரச் செய்ததில் காமராசருக்குக் கணிசமான பங்கு இருந்தது.

காமராசருக்கு இந்திராகாந்தியுடன் ஏற்பட்ட பிணக்கின் காரணமாகக் காங்கிரசு கட்சி இரண்டாக உடையும் நிலை ஏற்பட்டது. காமராசரின் தலைமையிலான சிண்டிகேட் காங்கிரசு தமிழக அளவில் செல்வாக்குடன் திகழ்ந்தது. ஆனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் வளர்ச்சியால் அதன் பலம் குன்றிப் போகக் காமராசர் தன்னுடைய அரசியல் பயணத்தைத் தமிழக அளவில் சுருக்கிக் கொண்டார். தமிழக ஆட்சியாளர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டி வந்தார். இந்திரா காந்தி நெருக்கடி நிலையினை அமல் செய்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்தவர்களில் காமராசரும் ஒருவர். இந்தியாவின் அரசியல் போக்குகுறித்து மிகுந்த குறையும் கவலையும் கொண்டிருந்த நிலையில் காமராசர் இருந்தார். இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்ட ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொரார்ஜி தேசாய் மற்றும் பல தலைவர்கள் இக்காலகட்டத்தில் இந்திரா காந்தி அரசால் கைது செய்யப்பட்டிருந்தனர். அக்டோபர் இரண்டு காந்தியடிகள் பிறந்த நாளன்று அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தார் காமராசர். ஆனால், அன்று ஆச்சார்ய கிருபளானியும் கைது செய்யப்பட்டார் என்ற செய்தியைக் கேட்ட அன்றே உயிர் துறந்தார்.



எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்ற படிக்காத மேதை, காமராசர் அக்டோபர் 2, 1975 திங்கள் இரண்டாம் நாள் (காந்தியின் பிறந்தநாள்) தனது 72வது அகவையில், மதிய உறக்கத்திற்குப் பின்னர் சென்னையில் இவ்வுலகை விட்டு பிரிந்தார். அவர் இறந்தபோது பையில் இருந்த சிறிதளவு பணத்தைத் தவிர வேறு வங்கிக் கணக்கோ, சொந்த வீடோ, வேறு எந்த வித சொத்தோ இல்லை. தன் வாழ்நாள் இறுதி வரை வாடகை வீட்டிலேயே வசித்தார். தமிழ்நாடு அரசு, காமராசர் நினைவைப் போற்றும் வகையில் சென்னை கிண்டியில் நினைவிடம் ஒன்றை அமைத்துள்ளது. இங்குக் காமராசரின் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் காமராசர் மணிமண்டபம் ஒன்றையும் அமைத்துள்ளது. இங்குக் காமராசரின் மார்பளவு சிலையும் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. அவரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்குக் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு காமராஜ் என்கிற பெயரில் அவருடைய வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிக்கும் திரைப்படம் வெளியானது. அதன் ஆங்கில மொழியாக்க குறுந்தகடு 2007ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவரை, தென்னாட்டு காந்தி, படிக்காத மேதை, அரசரை உருவாக்குபவர், பெருந்தலைவர் என்றெல்லாம் புகழ்வர். இவர் "கருப்பு காந்தி" என்றும் அன்போடு அழைக்கப்படுகிறார். காமராசரின் மறைவுக்கு பின், 1976ல் இந்திய அரசு இவருக்குப் பாரத ரத்னா விருது வழங்கியது. மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் என்றும், சென்னை பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**- இரமேசுஷ், இயற்பியல் உதவி பேராசிரியர்,** Canada

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு இயந்திரம் கையளிப்பு

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சுமார் 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு மற்றும் கிருமி நீக்கும் இயந்திரங்கள் இன்றைய தினம் வியாழக்கிழமை (15) மாலை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தினால் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டது.

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்படும் நோயாளிகளை நோய்த் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்காக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக 21 இலட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபாய் (2142500-00) பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு இயந்திரம் மற்றும் கிருமி நீக்கும் இயந்திரங்கள் வியாழக்கிழமை (15) மாலை 3 மணியளவில் முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் உமாசங்கர் அவர்களிடம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைத்து மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ கையளித்தார்.





இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் ஜேசு ரெஜினோல்ட், முல்லைத்தீவு மாவட்ட உதவி பிரதேச செயலாளர் திருமதி. எல்.கேகிதா வைத்திய அதிகாரிகளான வைத்தியர் திரு. சோபன் வைத்தியர் திரு. விதுரன் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (15-07-2021)**

# அரசின் பயங்கரவாதம் – பிரபாகரனின் பயங்கரவாதம்

**- எழுதியவர் ரெஹான் பெர்னாண்டோ**

*(இந்தத் தலைப்பில் ரெஹான் பெர்னாண்டோ என்பவர்* ***colombotelegraph*** *என்ற இணையதளத்தில் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரையை வரைந்திருந்தார். பெர்னாண்டோ போன்ற சில முற்போக்கு எழுத்தாளர்களே நடந்து முடிந்த போர் பற்றி நடுநிலையோடு எழுதுகிறார்கள். பெரும்பாலான படித்த சிங்கள அறிவுப் பிழைப்பாளர்கள் போரையும் போருக்கான காரணிகளையும் திரித்து ஒருதலைப் பட்சமாக எழுதுகிறார்கள். அரச பயங்கரவாதமே வி.புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்டது என்பது வரலாற்று உண்மை. பிரபாகரனை "பயங்கரவாதி" என்றும் ஈழப்போர் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்றும் பொருள்பட காட்டமாக எழுதுகிறார்கள். இப்போதும் எழுதுகிறார்கள். அவர்களது வாயை அடைப்பது போல் இந்தக் கட்டுரை அமைந்துள்ளது. அதன் முக்கியத்துவம் மற்றும் கனதி கருதி அதனை மொழிமாற்றம் செய்து வெளியிடுகிறோம். தமிழாக்கம் -* ***கனடா நக்கீரன்.****)*



ஒரு புறம், பயங்கரவாதம் என்பது அரசியல் நோக்கங்களை அடைவதில், குறிப்பாக குடிமக்களுக்கு எதிராக, வன்முறை மற்றும் அச்சுறுத்தலைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துவது என்று வரையறுக்கப்படலாம். மறுபுறம், இது ஒரு வன்முறை நடவடிக்கையாகும், இது உணர்வு பூர்வமாக, விருப்பத்துடன், தன்னார்வத்துடன் நன்கு ஒழுங்கமைக்கப்படுகிறது. எனவே, பயங்கரவாதம் எந்த மனித நடத்தையின் ஒரு பகுதியாக இருக்கக்கூடாது, ஏனெனில் அது ஒவ்வொரு துறையிலும் மனிதகுலத்திற்கு தீங்கு விளைவிக்கிறது மற்றும் காயப்படுத்துகிறது. எவ்வாறெனினும், பயங்கரவாதத்தை ஒரு சொல்லாக வெறுமனே ஆயுதப் போராட்டங்களுக்கு மட்டுப்படுத்த முடியாது. இது இன்று வேறு பல வடிவங்கள் மற்றும் சூத்திரங்களில் பயன்படுத்தப்படுகிறது. கோவிட்-19 என்பது பயங்கரவாதச் செயலாகும். சில நாடுகளால் பரவலாகப்பட்டு இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று வருகிறது என்பது என் கருத்து. வெளிப்படையாக, அது ஒரு தொற்றுநோய் போலத் தோன்றுகிறது, ஆனால் அது எவ்வாறு வெளிப்பட்டது மற்றும் அது யார் மூலம் பரவியது என்பது எங்களுக்குத் தெரியும்.

இலங்கையில் பயங்கரவாதத்தின் பயன்பாடு, குறிப்பாக, பல வடிவங்களைக் கொண்டுள்ளது. பொதுவாக, பயங்கரவாதம் குறித்து ஏதேனும் கலந்துரையாடல் நடந்தால் இலங்கையர்கள் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் குறிப்பிடுகிறார்கள். இருப்பினும், சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சில பெரிய சம்பவங்கள், மாநிலத்தில் பயங்கரவாதத்திற்குப் பொறுப்பானவர் பிரபாகரன் மட்டுமல்ல என்பதை எண்பித்துள்ளன. தீவிரமாக விவாதிக்க இன்னும் பல காரணிகள் உள்ளன.

இந்தக் கட்டுரையில், இலங்கையில் பயங்கரவாதம் என்றால் என்ன என்பதை எண்பிக்க விரும்பும் சில அத்தியாவசிய அம்சங்களை நான் வெளிக்கொணர விரும்புகிறேன்.

இலங்கையில் பயங்கரவாதம்

இது விவாதிக்கப்பட வேண்டிய ஒரு முக்கியமான பகுதி ஆகும். காரணம் பல இலங்கையர்கள் இந்த விவாதத்தை விருப்பத்துடனும் உணர்வுபூர்வமாகவும் புறக்கணிக்கிறார்கள், ஆனால் அவர்கள் வரலாற்றை முறையாக மறுவாசிப்புச் செய்யாமல் அந்தச் சொல்லைத் தவறாகப் புரிந்து கொள்கின்றார்கள். பயங்கரவாதத்தின் முதல் அணுகுமுறையே எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் சிங்கள எசமானிய சூத்திரத்துடன் தொடங்கியது என்பதில் யார் உடன்படுவார்கள்? அந்த முடிவு இந்த நாட்டின் அடிப்படை உணர்வை தலைகீழாக மாற்றிவிட்டது. பிரித்தானிய அதிகாரிகளிடமிருந்து சுதந்திரத்திற்கான போராட்டம் ஒரு கூட்டுப் போராட்டமாக இருந்தது. சில முஸ்லீம் மற்றும் தமிழ்த் தலைவர்களும் அயராது தங்கள் முயற்சிகளை மேற்கொண்டனர். தமிழ் மொழி இந்த நாட்டின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும். எனவே, சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் இரண்டும் சம நிலையில் இருக்க வேண்டும். அப்படியிருக்க ஒரு மொழி மட்டும் எப்படி இன்னொரு மொழிமீது மேலாதிக்கம் செலுத்த முடியும்? பண்டாரநாயக்க எடுத்த முடிவு வரலாற்றில் வலுக்கட்டாயமாகச் செய்யப்பட்ட பயங்கரவாதச் செயலாகும். அதன் விளைவை இன்றும் பார்க்கக் கூடியதாக உள்ளது. அது "குளிர்-பயங்கரவாதத்தின் ஒரு முதல்தரமான எடுத்துக்காட்டாகும் **(That was a classic instance of "cold-terrorism").**

இரண்டாவதாக, 71 இல் நடந்த கிளர்ச்சி ஒரு ஆயுதப் போராட்டத்தால் முடுக்கிவிடப்பட்ட பயங்கரவாதத்தின் தொடக்கப் புள்ளியாக இருந்தது. இது மக்கள் விடுதலை முன்னணியால் (ஜமக்கள் விடுதலை முன்னணி – ஜேவிபிஸ ஏற்பாடு செய்யப்பட்ட தெளிவான இராணுவ மூலோபாயம் ஆகும். இதுவே ரோஹன விஜயவீராவின் புரட்சி பற்றிய தெளிவான கோட்பாடாகவும் இருந்தது. எனவே, இலங்கை வரலாற்றில் 71 இன் கிளர்ச்சியுடன் பயங்கரவாதம் தொடங்கியது. அப்படியானால், பயங்கரவாதத்திற்குப் பொறுப்பான முதல் மனிதர் என்ற முறையில் பிரபாகரன் பெயரை எப்படி நினைவுகூரமுடியும்? அல்லது குறிப்பிட முடியும்? 1981 யூன் 1 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்டது. அது சிங்களவர்களாலும் அப்போது ஆட்சியில் இருந்த நடுவண் அரசாங்கத்தின் நேரடி ஆதரவுடனும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது ஒரு பயங்கரவாதச் செயல் என்பதை யாரால் புறக்கணிக்க முடியும்? அதே அரசாங்கம்தான் தாமாக முன்வந்து அதனை அம்பலப்படுத்தியது? இலங்கையில் கறுப்பு - யூலை நினைவுகளை யார் வெறுமனே புதைக்க முடியும்? இவை இலங்கையில் இடம்பெற்றது பயங்கரவாதம்தான் என்பதற்கான தெளிவான சான்றுகளாகும். இவ்வாறாக, பிரபாகரன் பின்னர் தனது எதிர் வன்முறையுடன் வருகிறார். இது சிங்களப் பெரும்பான்மைக்குப் பிரபாகரன் கொடுத்த பயங்கரமான பதிலாகும். சிங்கள மேலாண்மைக்கும் ஆட்சியின் சூத்திரத்திற்கும் பதிலளிக்க அவர் அதே பயங்கரவாதத்தைப் பயன்படுத்தினார்.





இந்த நிகழ்வுகள் அனைத்திற்கும் இடையில், ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதலுடன் இலங்கையில் பயங்கரவாதம் ஒரு புதிய வடிவத்தை எடுக்கிறது. இளம் முஸ்லிம்கள் குழு ஒன்று அப்பாவிகளிடமிருந்து தங்கள் அடிப்படைவாதத்தையும் பழிவாங்குதல்களையும் வெளிப்படுத்த முன்வந்தது. கிட்டத்தட்ட 300 ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கொன்றது. இந்தக் கொடூரமான நிகழ்வு வரை, தமிழர்கள் கொலையாளிகள் அல்லது பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டனர். தெற்குப் பகுதியில், பெரும்பாலான பவுத்தர்கள் ஒவ்வொரு தமிழனையும் ஒரு "புலி" என்று கருதினார்கள். (தமிழீழ விடுதலைப் புலிகள்" என்ற பெயரில் பிரபாகரன் தனது இயக்கத்தை நடத்தினார்). எவ்வாறெனினும், ஏப்ரல் -21 தாக்குதல் மற்றொரு பயங்கரவாதக் குழுவை வெளிப்படுத்தியது. இந்தத் தாக்குதலை மத்திய அரசும் எதிர்க்கட்சிகளும் தொடர்ந்து சூழ்ச்சித் திறனுடன் கையாண்டன. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு - போர் முடிவுக்கு வந்த பின்னர் - இந்த முஸ்லிம் குழுவினர் வேறுவிதத்தில் பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இலங்கையில் பயங்கரவாதத்தைப் பற்றிப் பேசும் இந்த நேரத்தில் அதனை யாராவது தடுத்து நிறுத்த முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் பயங்கரவாதத்தின் உண்மையான செயற்பாடு 2009 க்குப் பிறகு நடந்துள்ளது. இராசபக்ச ஆட்சி நாட்டில் இராணுவமயமாக்கல் மற்றும் குடியேற்றமயமாக்கல் மூலம் ஒரு விளையாட்டை விளையாடுகிறது. இது நான் இதுவரை பார்த்திராத மிகவும் ஆபத்தான பயங்கரவாதம் ஆகும். இவ்வாறாக இந்தக் கதையின் கொடூரமான பகுதி என்னவென்றால், ஒவ்வொரு தேர்தலிலும் பல சிங்களவர்கள் இந்தக் குடும்ப பயங்கரவாதத்தை ஊக்குவித்து வருகிறார்கள், அதனை விருப்பத்துடன் ஆதரிக்கிறார்கள் என்பதே. ஆகவே, போருக்குப் பிந்தைய கட்டம் நான் இதுவரை பார்த்திராத மிக ஆபத்தான பயங்கரவாதம் ஆகும். இது இந்த நாட்டில் சனநாயகத்தின் போர்வையின் கீழ் உள்ளது.


நீருக்கடியில் தீ ஜனலிரியின் மற்றொரு வடிவமாக எல்எல்ஆர்சிஸ

இலங்கையில் பயங்கரவாதத்தைப் பற்றி பேசும் இந்த சந்திப்பில் யாராவது நிறுத்த முடியும் என்று நான் நினைக்கவில்லை, ஏனெனில் பயங்கரவாதத்தின் உண்மையான செயல் 2009 க்குப் பிறகு நடந்துள்ளது. இராசபக்ச ஆட்சி நாட்டில் இராணுவமயமாக்கல் மற்றும் காலனித்துவமயமாக்கல் மூலம் ஒரு விளையாட்டை விளையாடுகிறது, இது எனக்கு மிகவும் ஆபத்தான பயங்கரவாதம் நான் இதுவரை பார்த்ததில்லை. இவ்வாறு, இந்த கதையின் கொடூரமான பகுதி என்னவென்றால், ஒவ்வொரு தேர்தலிலும் பல

*(தொடர்ச்சி 15ம் பக்கம்)*

# மினுக்கத்தை இழக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**பௌ**லிங் (Bowling) விளையாட்டில் ஒரே அடியில் பல இலக்குகளை விழுத்துவதைப் போல அரசாங்கமும் தனிமைப்படுத்தல் சட்டத்தை வைத்து தனது அரசியல் எதிரிகளை வீழ்துகிறது. என்ற தொனிப்பட ஒரு சிங்களக் கார்ட்டூனிஸ்ட் அண்மையில் ஒரு கார்ட்டூன் வரைந்திருக்கிறார்.

தனிமைப்படுத்த சட்டத்தை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக எப்பொழுதோ பயன்படுத்த தொடங்கி விட்டது. வைரஸ் தொற்றுக் காலத்தை சாட்டாக வைத்து தமிழ் மக்களின் நினைவுகூரும் உரிமையை நிராகரிப்பதில் தொடங்கி தமிழ் மக்களுடைய எதிர்ப்புப் போராட்டங்களின்போது அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டத்தை பயங்கரவாதத் தடைச்சட்டம் போல பயன்படுத்தியது. இதில் விதிவிலக்காக காணப்படுவது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான ஒரு பேரணிதான். அங்கேயும் கூட தொடக்கத்தில் அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் மூலம் போராட்டத்துக்கு தலைமை தாங்கக்கூடிய நபர்களை முடக்கப்பார்த்தது. ஆனால் பேரணி அதிகம் மக்கள்மயப்பட்ட காரணத்தால் ஒரு கட்டத்தில் அது அரசாங்கத்தால் தடுக்க முடியாத ஒரு எல்லைக்கு போய்விட்டது. ஆனால் அதுவல்லாத ஏனைய எல்லாப் போராட்டங்களின் போதும் அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டத்தை வெற்றிகரமாகக் கையாண்டு பெரும்பாலான போராட்டங்களை தடுத்திருக்கிறது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி இருக்கிறது.

இது இப்பொழுதுதான் அது சிங்கள கார்ட்டூனிஸ்ட்களுக்கு தெரிகின்றதா? கடந்த ஒன்றரை ஆண்டுகளாக எதிர்க்கட்சிகளை முடக்கியதில் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கும் ஒரு பங்குண்டு. அதைவிட முக்கியமாக அவ்வாறு எதிர்ப்புக் காட்டத் தேவையான சக்தி எதிர்க்கட்சிகளிடமும் இருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இப்பொழுது எந்த மகாசங்கம் ஹிட்லரைப் போல ஒரு தலைவர் வேண்டும் என்று கேட்டதோ எந்த மகா சங்கம் தனிச்சிங்கள மூன்றிலிரண்டு பெரும்பான்மையை ராஜபக்ஷக்களுக்கு வழங்குமாறு கேட்டதோ அதே மகா சங்கத்தின் பிரதிநிதிகளை அலாக்காகத் தூக்கிக் கொண்டு போகும் நிலைமை இப்போது வந்திருக்கிறது. இவ்வாறு தூக்கப்பட்டது மகா சங்கத்தின் ஒரு சிறு பிரிவுதான். அது முழு மகா சங்கத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. ஆனால் மூன்றில் இரண்டு தனிச் சிங்கள பெரும்பான்மை என்பது அதன் மினுக்கத்தை இழக்க தொடங்கிவிட்டது என்பதை அக்காட்சிகள் நமக்கு நிரூபிக்கின்றன.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக தனிமைப்படுத்த சட்டங்களை தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் பயன்படுத்தினார்கள். தமிழ் மக்களை ஒடுக்க அவர்களுக்கு ஒரு சட்டம் தேவை. அது பயங்கரவாத தடைச்சட்டம் ஆகவும் இருக்கலாம் அல்லது தனிமைப்படுத்தல் சட்டமாகவும் இருக்கலாம். ஏதோ ஒரு சட்டத்தை முன்வைத்து அவர்கள் தமிழ் மக்களின் போராட்டங்களை ஒடுக்க வேண்டும். அவ்வளவுதான். அதைத்தான் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அவர்கள் செய்தார்கள்.

இப்பொழுது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதாக அரசாங்கம் கூறுகிறது. அது ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தத்தின் நேரடி விளைவு. ஆனால் இங்கு ஒன்றை கவனிக்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்யப் போவதாகக் கூறப்படும் ஒரு காலகட்டத்தில்தான் தனிமைப்படுத்தல் சட்டத்தை உபயோகித்து போராட்டங்கள் நசுக்கப்படுகின்றன. எனவே இங்கு ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. பயங்கரவாத பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லையென்றாலும் அவர்களுக்கு போராட்டங்களை நசுக்க வேறு ஏதோ ஒரு சட்டம் இருக்கும் என்பதுதான். இது எதைக் காட்டுகிறது?

ஒடுக்கும் மனோநிலையைத்தான் காட்டுகிறது. அந்த மனோநிலையானது எப்பொழுதும் தனக்கு வசதியாக சட்டங்களை உருவாக்கிக் கொள்ளும். எனவே இங்கே பிரச்சினை என்னவென்றால் சட்டங்கள் அல்ல. சட்டங்கள் கருவிகளே. பிரச்சினையாக இருப்பது அந்த கருவிகளைப் பயன்படுத்தி ஒடுக்கும் மனோநிலைதான்.

அண்மையில் ஒரு சிவில் சமூக செயற்பாட்டாளர் என்னிடம் சொன்னார். “தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்திகள் புகைய தொடங்கிவிட்டன. ஒரு கட்டத்தில் அவை நெருப்பாக மூளும். அரசாங்கத்துக்கு எதிரான இந்த திரட்சியில் தமிழ் மக்களும் பங்கெடுக்க வேண்டும். அப்படி பங்கெடுத்தால்தான் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்கலாம். சிங்கள மக்களோடு இணையாமல் இதுபோன்ற அரசாங்கங்களை தோற்கடிக்க முடியாது என்பதே கடந்த கால வரலாறு” என்று.

அதில் உண்மை உண்டு. இலங்கைத் தீவு பிரித்தானியரிடம் இருந்து விடுபட்டதிலிருந்து இன்றுவரையிலுமான தேர்தல் களத்தை பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியும். எந்த ஒரு கட்சியாவது பெரும் பலத்தோடு ஆட்சிக்கு வரும் பொழுது அதனை வீழ்த்துவதற்கு எதிர்கட்சிகள் அணி சேர்க்கின்றன. இந்த அணிச்சேர்க்கைகளில் தர்மம் இல்லாமல் இருக்கலாம். இந்த அணி

*(தொடர்ச்சி 11ம் பக்கம்)*



ஒன்ராறியோ முழுவதும் லட்சக்கணக்காணோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள் ளுங்கள்.

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.

**ontario.ca/bookvaccine**
இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள
**1-888-999-6488**
ஐ அழையுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

*(10ம் பக்கத் தொடர்சசி)*

சேர்க்கைகளில் இனவாதமும் இருக்கும். ஆனாலும் இவ்வாறான கூட்டு முன்னணிகள் மூலம்தான் மிகப் பலம் பொருந்திய ஓர் அரசாங்கம் எப்பொழுதும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. இந்த அணிச் சேர்க்கை என்பது இலங்கை அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக காணப்படும் ஒரு போக்கு.

வெல்லக் கடினமான பெரும்பான்மையோடு ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வரும்போது அதை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பல்வேறு கட்சிகளுடன் இணைந்து ஒரு கூட்டுக்குப் போகும். அப்படித்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெல்லக் கடினமான ஒரு பெரும்பான்மையைப் பெறும் பொழுது ஐக்கிய தேசிய கட்சி தமிழ் முஸ்லிம் தரப்புக்களோடு இணைந்து அதை எதிர்கொள்ளும். கடந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் போது அதுதான் நடந்தது. இந்த வரலாற்றுப் போக்கின் அடிப்படையில் சிந்தித்தால் இப்பொழுது தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் கசப்பு வெறுப்பு ஏமாற்றம் போன்றவற்றை அரசாங்கத்துக்கு எதிரான ஒரு திரட்சியாக மாற்றுவதற்கு மறுபடியும் தமிழ் முஸ்லிம் மக்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டுத் தேவை என்ற ஒரு அபிப்பிராயம் ஒருபகுதி விமர்சகர்கள் மத்தியில் காணப்படுகிறது.

ஆனால் இங்கு உள்ள பிரச்சினை என்னவென்றால் 2015 ஆம் ஆண்டு அப்படி ஒரு கூட்டை உருவாக்கி தமது ஆட்சி கவிழ்க்கப்பட்ட அனுபவத்தை வைத்துத்தான் ராஜபக்சக்கள் தனிச்சிங்கள மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற ஒரு முடிவுக்கு போனார்கள். மிகக் குறிப்பாக 2018 ஆட்சி குழப்பத்தின் போதும் மஹிந்த ராஜபக்ச நினைத்தபடி காய்களை நகர்த்த முடியாமல் போனது. அதற்கு காரணம் தமிழ் சிங்கள பிரதிநிதிகள் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதுதான். அதை இன்னும் கூர்மையாக சொன்னால் கொழும்பை யார் ஆள்வது என்பதனை தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் தீர்மானித்தார்கள்.

அதை வைத்துதான் ராஜபக்சக்கள் ஒரு முடிவை எடுத்தார்கள். இனிமேலும் அவ்வாறு சிறிய மக்கள் கூட்டங்கள் கொழும்பை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிக்கும் ஒரு ஒரு நிலைமை வரக்கூடாது என்று. அவர்களுடைய அவ்வாறான சிந்தனைக்கு ஈஸ்டர் குண்டுவெடிப்பு வழிகளைத் திறந்து விட்டது. முடிவில் மூன்றில் இரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மையைப் பெற்று அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்.

இப்பொழுது அந்தப் பெரும்பான்மை அதன் மினுக்கத்தை இழக்கத் தொடங்கியிருக்கும் ஒரு பின்னணியில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த விரும்பும் சக்திகள் புதிய கூட்டணிகளைப் பற்றிச் சிந்திப்பதாக தெரிகிறது. அதற்குரிய நகர்வுகளிலும் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இங்கு பிரச்சினை என்னவென்றால் எந்த அடிப்படையில் ராஜபக்சக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கேட்கிறார்களோ அந்த அடிப்படை இப்பொழுதும் பலமாக உண்டு என்பதுதான். கொழும்பை யார் ஆள்வது என்பதை தமிழர்களும் முஸ்லிம்களும் தீர்மானிக்கக்கூடாது என்று அவர்கள் முடிவெடுத்தார்கள். அந்த அடிப்படையில்தான் தனிச்சிங்கள வாக்குகளை கேட்டுப் பெற்றார்கள். அவ்வாறு தனிச் சிங்கள வாக்குகளை கேட்பது என்பது பிரயோகத்தில் தமிழ் சிங்கள மக்களுக்கு எதிரானதுதான். எனவே தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் எதிரான உணர்வுகளை தொடர்ந்தும் தக்கவைப்பதன் மூலம் அவர்கள் இப்பொழுது ஆட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களையும் வாக்காளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களையும் எளிதாகக் கடந்து போகலாம்.

அதற்குரிய மிக வாய்ப்பான ஒரு சந்தர்ப்பத்தை வரும் செப்டம்பர் மாதம் ஜெனிவாவில் ஐநா மனித உரிமைகள் பேரவையில் உருவாக்கப்படவிருக்கும் ஒரு பொறிமுறை அவர்களுக்கு வழங்கும். கடந்த ஜெனிவா தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை தீவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளையும் ஆதாரங்களையும் திரட்டுவதற்கான ஒரு பொறிமுறை அது. அப்பொறிமுறை வரும் செப்டம்பர் மாதம் செயற்படத் தொடங்கும். வரும் செப்டம்பர் மாதம் ஐநாவின் நிதி ஆண்டு தொடங்கும். அப்பொழுது தான் அப்பொறிமுறைக்குத் தேவையான நிதி வழங்கப்படும். அவ்வாறான ஒரு பொறிமுறை செயற்படத் தொடங்கும் பொழுது அது கொழும்பில் அதிகரித்த அளவில் பதட்டத்தையும் கொந்தளிப்பையும் ஒரு இன அலையையும் உற்பத்தி செய்யப் போதுமாக இருக்கும். அந்த இன அலையை வைத்து அரசாங்கம் இப்போது ஏற்பட்டிருக்கும் எல்லா குழப்பங்களையும் வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார எதிர்விளைவுகளையும் இலகுவாகக் கடந்து போகக் கூடியதாக இருக்குமா?



# துயர் பகிர்வு



**தோற்றம்:**
25-02-1935

**மறைவு:**
15-07-2021

அமரத்துவமாது

## அரியமலர் (பேபி) நவரத்தினம்

**யாழ். தெல்லிப்பளை வருத்தலைவிளானை (தேன்கிரான்)
பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோவில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட
அரியமலர் (பேபி) நவரத்தினம் அவர்கள் தனது மனையில் இயற்கை எய்தினார்.**

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா, தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும்,
காலஞ்சென்ற கந்தையா, இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும்,
அமரர் கந்தையா நவரத்தினத்தின் (நவரத்தினம் ஸ்ரோர் உரிமையாளர் - யாழ். புகையிரத நிலைய சந்தி)
அன்பு மனைவியும்,

செல்வநாயகி கந்தையா, சிவஞானவதி சிவகுரு, அன்னபாக்கியம் துரையப்பா, அன்னகுமாரலிங்கம்,
சரஸ்வதிதேவி தில்லையம்பலம், குகஞானவதி சர்வானந்தன், இராசமலர் வன்னியசூரியர் ஆகியோரின்
பாசமிகு சகோதரியும்,

கமலாதரன் (இங்கிலாந்து), பாலசிங்கம் (பருத்தித்துறை), அமிர்தகௌரி (திருகோணமலை),
கமலவாசன் (கனடா), கமலதாசன் (இங்கிலாந்து), கேதாரகௌரி (யாழ்ப்பாணம்),
கமலசிறி (இங்கிலாந்து) ஆகியோரின் அருமைத்தாயாரும்,

ஜெயகௌரி, கமலினி, திருநாவுக்கரசு, கோமதி, தாரா சந்திரிகா, வேலுப்பிள்ளை, சுஜிதா
ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,

மருத்துவர் கேஜன், மாதுமை, சஞ்சீவன், மருத்துவர் பிரியகலா, கீர்த்தனா, நவீனன், வசுமதி,
சஜேந்தன், மதுமதி, ஹரிக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,

வசுதா, அக்ஷயா, தரணீஷ், ஆதிரன், அனிக்கா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-07-2021 அவரது இல்லத்தில் இடம்பெற்று
செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

மகன்- கமலாதரன் (இங்கிலாந்து): 447481292599
மகன்- கமலவாசன் (கனடா): 416-303-7675
மகன்- கமலதாசன் (இங்கிலாந்து): 447983612501
மகன்- கமலசிறி (இங்கிலாந்து): 447951070325

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



ஆண்டு ஒன்று ஓடி விட்டது தெய்வமே! எங்கே எங்களின் அப்பா
என நான்கு திசையிலும் தேடி மனம் வெதும்பி அழுவதை
இரக்கம் அற்ற இறைவா ஏன் வைத்தாய்? என இங்கு
பாவி நான் ஏங்குகின்றேன்.அன்பே உனது உடன்பிறப்புகளையும்
சொந்த பந்தந்தங்களையும் ஊர் மக்களையும் உங்களது கனீர்
என்ற குரலுடன் அன்போடு அரவணைக்கும் தன்மைகள் இல்லாது
இங்கு பாவிகள் நாங்கள் பரிதவிக்கின்றோம்.
அப்பா உன் நான்கு பிள்ளைகளும்
அன்பு மருமக்கள் மூவரும் குட்டி ஆரனும் தான்.
உன் உடன் பிறந்த அண்ணன் குடும்பமும் வந்த
சொந்தங்களும் உங்களின் கனீர் என்ற குரல் ஓசை
கேட்காது எனது வாசலில் வந்து உங்களின் நிழலில்
எதை சொல்வது என்று திக்கு தடுமாறி தவிக்கின்றார்கள்.
அப்பா இதற்காகவா நான் மனிதப்பிறவி எடுத்தேன் என்று
நெஞ்சு வலிக்குதப்பா.
அன்பே நீங்கள் உங்கள் கைகளால் ஊட்டிய
உணவால்தான் நாங்கள் உயிர்மூச்சு விடுகின்றோம்.
அப்பா உங்களின் நற்சிந்தனைகள் சுமந்து பிள்ளைகள்
மகத்தான வாழ்க்கை வாழ்கின்றார்கள்.
அதை பார்க்க என் தெய்வம் இல்லையே என்று
கண்ணீரில் மூழ்கவிட்ட காலனுக்கு கண்ணில்லையா?
அப்பா ஏகாதசியில் திதி வருவதால் சொர்க்க வாசலில்
சுகமான காற்றை சுவாசிப்பீர்கள் என என் மனதிற்கு நான்
ஆறுதல் சொல்வேன். ஆனால் அப்பா என் மனம்
இதற்காகவா அப்பா நீங்கள் இத்தனை விரதம் இருந்தீர்கள்
என நான் இங்கு ஏங்குகின்றேன். நான் நீங்கள் எதைக்
கேட்டாலும் தந்தேன். தாயகம் செல்லும் போது
எனை அழைத்தீர்கள் அப்பா நான் வராமல் இருந்ததால்
பாசத்தின் பிரிவு எனக்கு சோகத்தின் தொடக்கம் அப்பா.
அப்பா நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை எப்பிறப்பிலும் நமக்குக்
கிடைக்காது. எல்லா உறவுகளும் உங்கள் பாச பந்தத்தில்
துடிக்க இதை என்னால் தாங்க முடியாது.
ஆண்டவா! என் அப்பாவை திருப்பி தந்து விடு என அழுது
புலம்புகின்றேன். அப்பா எங்களின் கண்ணீர் காயவில்லை
இனி தாண்டும் நாட்கள் எல்லாம் உங்களின் நினைவுதான் அப்பா.
நீங்கள் அடியோடு சாய்ந்த நேரம் என் மனம் வலித்த
வலிப்பை என்னால் தாங்க முடியவில்லையே!
அன்போ எல்லாவற்றையும் எனக்கு காட்டித் தந்துவிட்டு
தைரியத்தையும் தந்து நான் ஏலாது என்று என் கையை
கடைசிவரை பிடிப்பீர்கள் என்று நான் நினைக்க வைத்து இருந்த
என் செல்வத்தை எடுத்த ஈசனுக்கு இரக்கம் இல்லையா?

தோற்றம்
~
11
~
02
~
1957

மறைவு
~
30
~
07
~
2020

காலத்தின் சோதனையிலும் வேதனையிலும் காலன்
என்னை கடத்திவிட்டான். என் தெய்வத்திற்கு எழுத
என் மனம் பேனா எடுக்க விடவில்லை.
இதுவே எனக்கு விதி என எழுதினேன் இம்மடலை
என் தெய்வமே உமது கடமைகளை நான் இனிதே
நிறைவேற்றுவேன் அப்பா.
நான்கு சடலங்களுக்கு நடுவே உங்கள் திருவுருவம்
இனி நாளெல்லாம் அதுவே எனக்கு
காவல் தெய்வம் அப்பா.

உங்களின் ஆத்மா சாந்தி அடைய
பாணாவெட்டி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

## திரு. குணரட்ணம் கனகலிங்கம்

தகவல்
திருமதி பகவதி கனகலிங்கம் - 905 472 7698
கணேசலிங்கம் குடும்பம் - 416 504 2449
அமுதலிங்கம் குடும்பம் - 647 716 1681

# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



## உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



**Scarborough / Downtown Toronto: 416-489-2000**
**Mississauga / Brampton: 416-650-5400**



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |

**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*
**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மலேசிய மடல்

# கொரோனாவினால் இறப்போரின் குடும்பங்களுக்கு அரசாங்க உதவி தாமதிக்காமல் கிடைக்க வேண்டும்

## - சட்டமன்ற உறுப்பினர் குணராஜ்



நக்கீரன்



*கிள்ளான், ஜூலை 15:*

**கோ**விட்-19 ஆட்கொல்லி கிருமியின் தாக்கத்திற்கு ஆளாகுவோரின் அல்லலும் கோவிட்-ஆல் இறப்பவர்களின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் பலவாறான துயரமும் சொல்லி முடியாதவை. பொருளாதார சிக்கலுக்கும் மன அழுத்தத்திற்கும் பாசப் போராட்டத்திற்கும் ஆளாகும் அத்தகைய குடும்பங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கும் சமூக நல உதவித் தொகை உரிய நேரத்தில் கிடைத்தால் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு அது பெரும் உதவியாக இருக்கும் என்று சிலாங்கூர் மாநிலம், செந்தோசா தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஜி. குணராஜா தெரிவித்தார்.

கொரோனா பாதிப்பினால் இறப்போரின் குடும்பங்களுக்கு மத்தியக் கூட்டரசு சார்பில் 5,000 வெள்ளியும் சிலாங்கூர் மாநில அரசு மூலம் 1,000 வெள்ளியும் வழங்கப்படுகின்றன. இறந்தவரின் உடலை நல்லடக்கம் செய்யவோ அல்லது எரியூட்டவோ மயானத்திற்கு எடுத்துச் செல்லும் முன், சம்பந்தப்பட்டவரின் உடலை அடையாளம் காட்டுவதற்காக அவரின் குடும்ப உறுப்பினர்கள் அதிகபட்சம் இரண்டு பேர் மருத்துவமனைக்கு வருகைதரும்போது, இந்த உதவித் தொகைக்கான விண்ணப்ப படிவங்கள் மருத்துவமனை அதிகாரிகளால் வழங்கப்படுகின்றன.

அத்தகைய விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பியபின், அரசாங்க அதிகாரிகள் பரிசீலனை செய்து ஒப்புதல் வழங்கியதற்குப் பின் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவித் தொகை வந்துசேர மாதக் கணக்கில் ஆகிறது. மாறாக, இந்த உதவித் தொகை உடனே கிடைத்தால், சம்பந்தப்பட்ட குடும்பங்கள் அடுத்தக்கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள உதவியாக இருக்கும். ஏற்கெனவே குடும்ப உறுப்பினர் இறந்துவிட்ட சோகத்தில் இருக்கும் அவர்கள் நல்லடக்க செலவுத் தொகைக்காக அந்த நேரத்தில் அங்குமிங்கும் அலைய வேண்டிய நெருக்கடியும் ஏற்படாது.

நாட்டில் அமல்படுத்தப்படும் நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணையால் மலேசிய குடும்பங்கள் கடந்த ஓராண்டிற்கும் மேலாக வருமான பாதிப்பிற்கும் வேலை இழப்பிற்கும் ஆளாகியுள்ள நிலையில், குறிப்பாக "பி-40" என்று வகைப்படுத்தப்பட்ட நலிந்த குடும்பங்கள் விழிபிதுங்கி நிற்கும் இந்த நேரத்தில், குடும்பத்தில் இறப்பு நேர்ந்தால் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

இத்தகைய பொருளாதார சிக்கலால், பொதுவாக அனைத்து மக்களும் பரிதவிக்கின்ற நிலையில் எத்தனையோ குடும்பங்கள் கொரோனாவினால் இறந்த தங்கள் குடும்ப உறுப்பினரை உடனே தகனம் செய்ய முடியாமல் நாள் கணக்கில் காத்திருக்கின்றனர். இந்த வேளையில், இறந்தவர்களின் உடலை எரிக்கவோ அலல்து அடக்கம் செய்யவோ எடுத்துச்செல்லும் வாகன சேவை வழங்குவோரும் ஒருசில இடங்களில் அதிகக் கட்டணம் விதிப்பதாகத் தெரிகிறது.



அவர்களுக்கும் சுகாதார பாதுகாப்புக் கவச உடைகளைப் பயன்படுத்துவது, வாகனங்களை அடிக்கடி கிருமிநாசினி கொண்டு தூய்மை செய்வது போன்ற புதுவகை செலவு ஏற்படுகிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டி இருக்கிறது.

இஸ்லாமிய குடும்ப உறுப்பினர்கள் கொரோனா பாதிப்பிற்கு ஆளாகி இறக்க நேர்ந்தால், சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் இஸ்லாமிய நல வாரியத்தின் மூலம் அனுகூலமும் உதவியும் கிடைக்கிறது. ஆனால், இந்திய, சீன குடும்பங்களுக்கு அதுபோன்ற உதவி எதுவும் கிடைப்பதில்லை.

எனவே, ஏழை மற்றும் நலிந்த குடும்பங்கள் இதுபோன்ற சிக்கலில் இருந்து விடுபடும் வகையில், மருத்துவமனையிலேயே "பேனல்" போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் சுகாதார மற்றும் சமூக நலத் துறை அதிகாரிகளை நியமித்து, கொரோனா நச்சிலால் பாதிக்கப்பட்டு இறப்போரின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை உடனே வழங்குவது பற்றி விரைந்து பரிசீலிக்க வேண்டும் என்று மக்கள் நீதிக் கட்சி (பிகேஆர்) கோத்தா ராஜா தொகுதி பொறுப்பாளருமான திரு.குணராஜா மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அன்றாட வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்ட நிலையில், கோவிட்-19 நச்சுயிரியின் தாக்கத்திற்கு ஆளாகி இறப்போரின் குடும்பங்கள் நிலைகுத்தி நிற்பதை கண்கூடாக பார்க்க முடிகிறது.

கணவனுக்கு பாதிப்பு என்றால் மனைவிக்கு நெருக்கடி அதைப்போல மனைவிக்கு தொற்று என்றால் கணவருக்கு பெரும்பாதிப்பு அத்துடன் ஏனைய குடும்ப உறுப்பினர்களும் தனிமைப்படுத்துதலுக்கு ஆளாகி பாசப்போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட வேளையில், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர் இறக்க நேர்ந்தால் குடும்ப உறுப்பினர்கள் முகத்தைக்கூட பார்க்க அனுமதிக்கப் படுவதில்லை. இது, ஒட்டிப் பிறந்தவர்களை வெட்டிப் பிரிப்பதைவிட கொடுமையானது.

நெருக்கடியான இத்தகைய நேரத்தில் மத்திய, மாநில அரசுகள் வழங்கும் உதவித் தொகைக்கு மாதக்கணக்கில் காத்திருப்பதை தவிர்த்தால், அது பாதிப்பிற்கு ஆளான குடும்பங்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் வழங்கும் என்பதை மக்கள் பிரதிநிதி என்னும் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன் என்று குணராஜ் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24

# அரசின் பயங்கரவாதம் – பிரபாகரனின் பயங்கரவாதம்

*(9ம் பக்கத் தொடர்ச்சி)*

சிங்களவர்கள் இந்தக் குடும்ப-பயங்கரவாதத்தை ஊக்குவித்து வருகிறார்கள். அதனை விருப்பத்துடன் ஆதரிக்கிறார்கள். ஆகவே, போருக்குப் பிந்தைய கட்டம் பயங்கரமான மற்றும் திகிலூட்டும் பயங்கரவாதமாகும். இது இந்த நாட்டில் சனநாயகம் என்ற போர்வையின் கீழ் உள்ளது.

மகிந்த இராசபக்ச 2009 இல் ஆயுதப் போராட்டம் முடிந்த பின்னர் பெயருக்குச் சிங்கள - பவுத்தம் எனப் பாசாங்கு செய்வதற்கும் மற்றும் அதனைத் தனக்குச் சாதகமாகக் கையாள்வதற்கும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை **(Lessons Learnt and Reconciliation Commission, LLRC)** நியமித்தார். ஆனால் அந்த நியமனம் போர்க் குற்றங்களைத் தொழில்முறை ரீதியாக அகற்றவும் சர்வதேச சமூகங்களைப் திருப்திப்படுத்தவும் மேற்கொண்ட தெட்டத்தெளிவான தந்திரமாகும். எல்எல்ஆர்சிக்கு எதிர் அறிக்கையைத் தயாரித்த மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் அவர்களின் தரவுகள் மூலம் பார்ப்பது பொருத்தமானது. அந்தத் தரவுகள் நல்லிணக்க ஆணையம் என அழைக்கப்படுவதன் தவறான திருப்பத்தை நினைவூட்டுகின்றன.

2008 ஒக்தோபர் முற்பகுதியில் வன்னியில் மக்கள் தொகை பற்றிய முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி காச்சேரிகளின் தரவுகளின் அடிப்படையிலும் அதன் பின்னர் அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் இருந்த பிரதேசங்களுக்கு வந்தவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் 1,46,679 பேர் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று தெரிகிறது. கச்சேரிகளின் கூற்றுப்படி, 2008 ஒக்டோபர் முற்பகுதியில் வன்னியில் வாழ்ந்த குடித்தொகை 429,059 ஆக இருந்தது (இணைப்பு 4 மற்றும் 5 ஐப் பார்க்கவும்). 2009 யூலை 10 ஆம் திகதிவரை மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் **(United Nations Office for the Coordination of Humanitarian Affairs-OCHA)** தெரிவித்த தரவுகளின்படி, வன்னியிலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகளுக்கு வந்தவர்களது மொத்தத் தொகை 282,380 என மதிப்பிடப்பட்டுள்ளது (இணைப்பு 6 (1) யைப் பார்க்கவும்).

ஒக்தோபரின் ஆரம்பத்தில் வன்னியில் உள்ள மக்கள் தொகை மற்றும் அதற்குப் பிறகு அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை குறித்து முல்லாட்டிவ் மற்றும் கில்லினோச்சியின் கச்சேரிஸின் தகவல்களின் அடிப்படையில், 146,679 பேர் கணக்கிடப்படவில்லை என்று தெரிகிறது.
கச்சேரியின் கூற்றுப்படி, அக்டோபர் 2008 இன் ஆரம்பத்தில் வன்னியில் மக்கள் தொகை 429,059 ஆக இருந்தது (இணைப்பு 4 மற்றும் 5 ஐப் பார்க்கவும்). ஜூலை 10, 2009 நிலவரப்படி ஐ.நா. **OCHA** புதுப்பித்தலின் படி, வன்னியில் இருந்து அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு வெளியே வந்த மொத்த மக்கள் தொகை 282,380 என மதிப்பிடப்பட்டுள்ளது (இணைப்பு 6 ஐப் பார்க்கவும்) **[1]**

ஆவணத்தின்படி எஞ்சியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை யார் மறுக்க முடியும்? இன்று வரை அந்த உயிர்களைப் பற்றிய சரியான கணக்கு இல்லை. "அது பயங்கரவாதம் அல்ல" என்ற உண்மையை யார் இன்னும் நியாயப்படுத்த முடியும்?ஆயரின் அறிக்கை நீதிக்குப் புறம்பான கொலைகள், வலிந்து காணாமல் போதல், சாதாரண மக்களின் உடல் ஊனம், அதிர்ச்சி, கட்டாய கொலனியாக்கம், இடப்பெயர்வு மற்றும் பலவற்றின் தீவிரத்தை மேலும் வெளிப்படுத்துகிறது. **[2]** எல்எல்ஆர்சி எதை நோக்கமாகக் கொண்டது என்றால் சர்வதேச சமூகங்களை தவறாக வழிநடத்துவதற்கும் மற்றும் உள்ளூர் குழுக்களை பாசாங்குத்தனமாக திருப்திப்படுத்துவதும்தான். இன்று "நல்லிணக்கம்" என்ற சொல்லைப் பயன்படுத்த முடியாது.

இராணுவமயமாக்கல் என்ற அந்தச் சொல் "மேம்பாடு" என்று அழைக்கப்படுவதன் மூலம் அதன் பொருள் வலுக்கட்டாயமாக மாற்றப்பட்டுள்ளது. அரசு பாசாங்குத்தனமாகவும் தொழில்முறையிலும் போரின் ஆயுதக் கட்டத்தின் முடிவை எண்பித்துள்ளது அல்லது காட்டியுள்ளது, இருப்பினும் தமிழ்க் குடிமக்களுக்கு எதிரான மற்ற அனைத்து நடவடிக்கைகளும் வெவ்வேறு மட்டங்களில் நடைபெறுகின்றன. எல்எல்ஆர்சி மாநில ஆட்சி மனநிலையை, குறிப்பாக மறு குடியேற்றத்தின் மூலம் ஊக்குவித்துள்ளது. இந்த மறுகுடியேற்றம் என்ற சொல்லின் பயன்பாடு பயங்கரவாதத்தின் தெளிவான வடிவமாகும், ஏனென்றால் அது வரலாற்றில் மூன்று சந்தர்ப்பங்களில் நடந்தது, 1920 கள் மற்றும் 1930 களில் ஜே.ஆர். ஜெயவர்தனாவின் ஆட்சியின் கீழ் பிரித்தானியர்கள் காலத்தில் இருந்தது போன்ற எல்லைக் கிராமங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இன்றும் போருக்குப் பிந்தைய காலத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன.

(மிகுதி அடுத்த கிழமை)

- மொன்றியால் விண்ணமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#54



"கலைஞர்களே, நீங்கள் அரசியலில் அனுதாபியாக இருங்கள், ஆனால் அதனுள் நுழையாதீர்கள். அரசியல்வாதியின் நண்பனாய் இருங்கள். ஆனால் நீங்கள் அரசியல்வாதி ஆகி விடாதீர்கள். அதில் சென்று உறுப்பினராகி அந்த வலையில் மாட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் நண்பர் ஒரு அரசியல்வாதியா? அவருக்கு உதவுங்கள், கட்சியின் கொள்கைக்காக ஆதரியுங்கள் பரவாயில்லை. நீங்களே கட்சிக்காரனாகி விடாதீர்கள் நீங்கள் பாடகனாகவே இருங்கள். பாடலாகவே ஆகிவிட வேண்டாம் "Be a singer, Don't become the song".

மேற்கண்ட கூற்றை தனது அரசியல் வாழ்வின் அனுபவங்களாக சொல்லிச்சென்ற சிவாஜி ஐயாவின் வாக்கு இன்று பலரது அரசியல் வாழ்வுக்குப் பாடமாகிறது. "அரசியலில் சிவாஜிகணேசன்", என ஆராய விரும்புவோர்க்கு அவரது அரசியல் வாழ்வு பற்றி கூற விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக ஈடுபடாத காலத்திலேயே எப்போதும் தூய வெண்மையான கதர் ஆடையே அணிவார். சுதந்திரப்போராட்ட தியாகியாக சிறை சென்ற தந்தை சின்னையா மன்றாடியாருக்குப் பிள்ளையாக பிறந்த வி சி கணேசன் எப்படி சுயமரியாதைக் கொள்கைகளில் பற்றுடையவரானார்?.

அறிஞர் அண்ணாவின் ஆதரவில் காஞ்சிபுரத்தில் இருந்தபோது கணேசன் கழக கூட்டங்களுக்கு அண்ணாவுடன் செல்வார். கட்சிக் கூட்டங்களில் பேசும் ஆற்றல் இல்லாத காரணத்தாலும், கணேசனுக்கு கலையின் பால் கொண்டுள்ள ஆர்வத்தையும் உணர்ந்து தீர்க்கதரிசனமாக கணேசன் கலையுலகில் தான் பிரகாசிப்பார். அரசியல் ஒத்து வராது என்பதால் தான் அவரை திரையுலகில் அடியெடுத்து வைக்க அண்ணா துணை நின்றார். அண்ணா அவர்களின் அன்பும் அரவணைப்பும், கலைஞர் மு கருணாநிதியின் கன்னல் தமிழ் வசனமும் அன்று கணேசனை கழக ஆதரவாளராக்கியது. கணேசர் அண்ணா அவர்களுடன் நெருக்கமாக இருந்த போதே, நடிப்பிசைப் புலவர் கே ஆர் ராமசாமி, லட்சிய நடிகர் எஸ்எஸ் ஆர், நடிகமணி டிவி நாராயணசாமி ஆகியோர் கழகத்தின் உறுப்பினர்களாகவும், பிரச்சாரப் பேச்சாளராகவும் விளங்கினார்கள். வேடிக்கை என்னவென்றால் கழகத்திலிருந்து சிவாஜி அவர்கள் வெளியேறும் வரை கழகத்தின் அடிப்படை உறுப்பினராகவே இருந்ததில்லை. ஆனால் அவருக்குக் கழக முத்திரை குத்தப்பட்டிருந்தது. "பராசக்தி" படம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்த போது அதன் வெற்றி விழா கழகத்தின் சார்பில் சென்னையில் கொண்டாடப்பட்டது.

கழகத் தொண்டர்கள் சிவாஜி அவர்களைக் கட்சி நடிகராகவே கருதினார்கள். "பராசக்தி" படத்தில் துணை இயக்குனராகப் பணியாற்றிய பீம்சிங், கணேசருக்கு நெருக்கமான நண்பரானார். அவர் காங்கிரஸ்காரர் 1956-இல் தமிழ்நாட்டில் பெரும் புயல் வந்து கடும் சேதமுண்டாயிற்று. "புயல் நிவாரணத்திற்காக எல்லோரும் பணம் வசூல் செய்து தாருங்கள்" என்று அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிவாஜி அவர்களும், முதலில் விருதுநகரில் உள்ள தெருவில் சென்று துண்டை விரித்து "பராசக்தி" வசனம் பேசி பணம் வசூல் செய்தார். வசூல் நிறைய சேர்ந்தது. அதை கட்சிக்கு கொடுத்து விட்டு, சேலத்தில் படப்பிடிப்புக்கு சென்று விட்டார்.

அதன்பின் என்ன நடந்தது? சிவாஜியே கூறியதை அப்படியே தருகிறேன். "அண்ணா அவர்கள் அதிகமாக பணம் வசூல் செய்தவர்களுக்கு ஒரு பாராட்டுவிழா வைத்தார். நான் சேலத்திலிருந்து எனது தாயாருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இன்று விழா நடக்கிறது யாராவது எனக்கு அழைப்பு விடுத்தார்களா? என்று கேட்டேன். இல்லையென்று தாயிடமிருந்து பதில் வந்தது. உடனே நான் அந்த நேரமே சேலத்தில் இருந்து புறப்பட்டு மாலை நான்கு மணிக்கெல்லாம் சென்னை வந்து விட்டேன். விழாவிற்காக என்னை கூப்பிடுவார்கள் என்று வீட்டில் காத்துக் கொண்டிருந்தேன். யாரும் கூப்பிடவில்லை. மாலை 6 மணியளவில் பாராட்டுக் கூட்டம் நடக்கிறது. அப்பொழுது தான் முதன் முதலில் எம்ஜிஆரை கூட்டிச்சென்று அந்தக் கூட்டத்தில் மேடையேற்றி கௌரவிக்கிறார்கள். அதிகமாக நிதி வசூலித்தவன் நான்தான். ஆனால் சிவாஜி அவர்களை மேடையேற்றி பாராட்டுகிறார்கள், "எங்கே கணேசன் வரவில்லையா? என அண்ணா கேட்டிருக்கிறார். இல்லை, கணேசன் வரமுடியவில்லை என்று சொல்லிவிட்டார், என்று சிலர் அண்ணாவிடம் கூறியிருக்கிறார்கள். என்னை அண்ணாவிடமிருந்து கழற்றி விட சிலர் நினைத்தார்கள். அந்த நேரத்தில் கலைஞர் மு.க வும் அங்கிருந்தார். அவர் கூட "கணேசனைக் கண்டிப்பாக கூப்பிடுங்கள்", என்று அவரால் கூற முடியவில்லை?



இந்த அதிர்ச்சி "என்னை பாதித்தது". எல்லா அவமதிப்பையும் பொறுத்துக் கொண்டு பொறுமையுடன் இருக்க முயன்றேன். ஆனால் இந்த நிகழ்ச்சியால் பைத்தியம் பிடித்தவன் போல் ஆகிவிட்டேன்.

இந்த சமயத்தில் என் நண்பர் பீம்சிங் என்னிடம் பேசிக்கொண்டிருந்த போது "திருப்பதிக்கு செல்கின்றேன் வருகிறீர்களா..? எனக் கேட்டார் நானும் சம்மதம் தெரிவித்து அவருடனேயே திருப்பதிக்கும் சென்றேன்.

கடவுள் எதிர்ப்புக் கொள்கையில் கழகம் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரம் கணேசன் திருப்பதிக்கு போய் வந்த செய்தி கழகத் தொண்டர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்தது. அதனால் தொண்டர்கள் எந்த சாதாரண கணேசனை கொண்டாடினார்களோ அவர்களே "திருப்பதி கணேசா.. திரும்பிப் போ..", என கேலி செய்து கண்டனம் தெரிவித்தார்கள். சிவாஜி போஸ்டர்களுக்கு சாணி அடித்தார்கள். சிவாஜி மிகவும் மனமுடைந்து போனார்.

அந்த காலத்தில் நாடகக் கம்பெனியை நடத்தி வந்தவர்கள் அத்தனை பேரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். சிவாஜியின் குரு, என்று அழைக்கப்படும் "யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை" அவர்கள் கூட காங்கிரஸ்காரர் தான். நாடகங்கள் நடக்கும் போது இடையிடையே சுதந்திரப் போராட்ட பாடல்களையும் பாடுவார்கள். அந்த நேரத்தில் சிவாஜி அவர்களும் நாடகக் கம்பெனியில் இருந்ததால் அன்று பிஞ்சு உள்ளத்தில் பதிந்த தேசிய உணர்வு நீறுபூத்த நெருப்பாக இருந்தது. "திருப்பதி கணேசன்" என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டதும் சிவாஜி கணேசன் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

அச்சமயத்தில் திமுகவில் எம்.ஜி.ஆர் தீவிரமாகவும் முக்கிய பிரமுகராக வளர்ந்த காரணத்தினால், காங்கிரஸ் கட்சிக்கு எம்ஜிஆருக்கு நிகரான நடிகரின் ஆதரவு தேவைப்பட்டது. காங்கிரஸ் பிரமுகர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சிவாஜி ஐயாவை கட்சியின் பிரச்சார பீரங்கியாக்கினார்கள். "நடிகர் திலகம்" அவர்களின் படங்களின் வெள்ளி விழாக்களில் காங்கிரஸ் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜரின் செல்லப் பிள்ளையானார் சிவாஜி அவர்கள். "கலைஞன் பொது நலம் விரும்பும் டாக்டர்களை போல இருக்க வேண்டும். மக்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும் மனநல மருத்துவர்களாக வாழ வேண்டும். அவர்கள் அரசியலில் நேரடிப் பங்கு கொள்வது நல்லதல்ல...", (பேசும்படம் 1961) இதழுக்கு பேட்டி அளித்திருந்தவர் பின்னர் அவரே நேரடியாக அரசியலில் காங்கிரஸ் கட்சி ரீதியாக ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

சிவாஜி ஐயாவின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவரான பெரியவர் சின்ன அண்ணாமலை அவர்களால் "சிவாஜி ரசிகர் மன்றம்" உருவாக்கப்பட்டது. சிவாஜி ஐயாவின் பிறந்த நாள் விழாக்கள் காங்கிரஸ் பேரவை மாநாடுகளாக பிரமிக்க வைத்தன.

1970ல் அகில இந்திய சிவாஜி மன்றப் பேரவை சென்னையில் இரு நாட்கள் நடைபெற்றன. சிவாஜி ஐயாவின் 44-வது பிறந்த நாள் சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அரசியல் கட்சியின் மாநாடு போல் நடந்தது. "சவாலே சமாளி" (150வது படம்) 100வது நாள் வெற்றி விழாவும் அவ்வாறே அரசியல் மாநாடானது.

1972 இல் சிவாஜி மன்றப் பேரவை கோவையில் நடைபெற்றது. பெருந்தலைவர் காமராஜர் ஐயா உட்பட பல காங்கிரஸ் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். சிவாஜி ஐயாவின் பேச்சில் கனல் தெறித்தது. 1958ல் சிவாஜி ஐயா தனது சொந்த செலவில் பாரதி பிறந்த எட்டயபுரத்தில் "பாரதி விழா" நடத்தினார். இவ்விழாவில் கவிஞர் கு.சா கிருஷ்ணமூர்த்தி - மத்திய அமைச்சர் சி சுப்பிரமணியம் - ஐயா மா.பொ.சி, சின்ன அண்ணாமலை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். "கப்பலோட்டிய தமிழன்" பட ஆரம்ப விழா - சென்னை "கதர் வார விழா" - 1957 நேரு ஸ்டேடியத்தில் நடந்த "சுதந்திர நாள் விழா" என பல்வேறு விழாக்களை தேசபக்தி விழாக்களாகவே கொண்டாடப்பட்டன.



1982ல் ராஜ்யசபா உறுப்பினர் ஆகி "சிவாஜி கணேசன் எம்.பி" எனப் புகழோடு விளங்கினார். காங்கிரஸ் கட்சி பிளவுபட்டதும், காமராஜர் கரத்தை வலுப்படுத்துவோம் என்று காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ் முழுமூச்சாக ஈடுபட்டார்.

ஐயா காமராசரின் மறைவுக்குப் பின்னர் "இந்திரா காங்கிரஸ்" ல் இணைந்தார். இந்திரா அன்னையின் மறைவுக்குப் பின்னர் விலகினார். அதன்பின் நண்பர் வி. பி சிங் ன் வேண்டுகோளின்படி அவருடைய தலைமையிலான "ஜனதா தளம்" அவரை வரவேற்றது. ஜார்ஜ் பெர்னாண்டஸ் சிவாஜிகுத்த துணையாக இருந்தார். தேசிய முன்னணியின் பிரதான அங்கமாக இருந்த ஜனதா தளமும், தி மு கழகமும் நினைத்துப் பார்க்க முடியாத பெரும் தோல்வியை தழுவியதால் அரசியல் வேகமும், மோகமும் சிவாஜி ஐயாவுக்கு குறைய ஆரம்பித்தது. "ராஜீவ் காந்தியின்" அரசியல் வரலாற்றிலும் சிவாஜி அவர்களுக்கு பங்கிருந்தது. "ராஜீவ்காந்தி பிரதமராவதற்கு நானும் பாடுபட்டிருக்கின்றேன். அதை மறக்க முடியாதல்லவா எலக்சனுக்கு முன்னால், ஒரு தடவை சென்னையில் கவர்னர் மாளிகையில் ராஜீவைச் சந்தித்தேன். நிறைய கரையான்கள் நமது கட்சிக்குள்ளேயே இருக்கிறது. அதை ஒழிக்க வேண்டும். இல்லையேல் நீங்கள் வரமுடியாது என்றேன். ராஜீவுக்கு முகமெல்லாம் சிவந்து விட்டது. என்னடா இப்படி கூறுகிறானே! இது மிக டெலிகேட்டான சமாச்சாரமல்லவா!".

இதுதான் தகுந்த தருணம் என்று என்னை நம்மிடையேயுள்ள தேசபக்தர்கள் கட்சியிலிருந்து எப்படியோ கழட்டி விட்டார்கள்.

என்னுடன் உள்ளவர்கள் "நீ தான் பெரியவன். கட்சி ஆரம்பித்தால் பெரிய ஆளாய் வந்து விடுவாய். உன்னை நம்பித்தான் நாங்களும் இருக்கிறோம்", என்று எனக்குத் தூபம் போட்டு உசுப்பி விட அவை எல்லாம் உண்மை என்று நம்பி நானும் தனிக்கட்சி ஆரம்பித்தேன். அது தான் "தமிழக முன்னேற்ற முன்னணி" என்ற முத்தாய்ப்பு வைத்த செய்திகளை அவரது சுயசரிதையில் காணலாம்.

1967 ஆம் ஆண்டில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் சொன்ன கருத்து நினைவுக்கு வருகிறது! "பொதுவாக நடிகர்கள் இலை மறைவு - காய் மறைவாக தான் வாழ்ந்து வரவேண்டும். அவர்கள் மக்கள் மத்தியில் வந்தால், நேற்று பார்த்தவர்கள் தானே என்று எண்ணி விடுவார்கள்" இந்த கருத்து எத்தனை அளவு உண்மை?

புற்றீசல் போல் கிளம்பி வரும் நமது வெள்ளித்திரை நாயகர்கள் கொஞ்சம் கவனத்தில் கொண்டால் நாட்டுக்கு நல்லது செய்தவர்கள் ஆவார்கள்?

*நினைவுகள் தொடரும்...*



**மேலதிக தகவல்களுக்கு:**
**திருமதி.வசந்தா நடராசன் B.A.,**
**(416) 332-0269 vasantha@rogers.com**

# ஈழத்துத் திருக்கோவில்கள் 955



## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், கொழும்பு

கோபுரதரிசனம் கோடிபுண்ணியம் என ஆன்றோர் கூறியுள்ளனர். முன்னோர் வாக்குக்கமைய தொலை தூரத்திலிருந்தும் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள தெய்வங்களை மனதிருத்தி வணங்கும்வகையில், மிக உயரமாக இராசகோபுரம் அமைக்கப்பட்டுள்ளமை, இவ்வாலயத்தின் சிறப்பாகக் காணப்படுகின்றது. கோபுர தரிசனமும் இறையுணர்வும் இந்துக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது. கோயில்கள் என்றதும் அனைவருடைய மனக்கண்முன் நிற்பது அழகிய கோபுரங்களே ஆகும். ஆலய அமைப்பிலே கருவறை, அந்தராளம், முகமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, பரிவாரஆலயங்கள், மற்றும் திருமதில்கள் இவைகளை உள்ளடக்கி திருவாயிலை அலங்கரிக்கும் வகையில், ஒரு அடுக்குமுதல் பல அடுக்குகக்களைக் கொண்டதாய், விண்ணைத்தொடும் அளவிற்கு உயர்ந்ததாய் அமைக்கப்பெறும் அமைப்பே, கோபுரம் ஆகும். இதனை இராசகோபுரம் என்றும் சிறப்பித்துக் கூறுவர். கோயிலுக்குச் செல்ல இயலாதவர்கள், தூரத்திலிருந்தே கோபுரத்தை வழிபடுதலை, அன்றாட வாழ்க்கையில் காணக்கூடியதான சமுதாய அமைப்பு தற்காலத்திலும் காணப்படுகின்றது.

கோபுர அமைப்பை கீழ்ப்பகுதி என்றும், மேற்பகுதி என்றும் இருபகுதிகளாகப் பிரிக்கலாம். கீழ்ப்பகுதியானது உபபீடம், அதிட்டானம், சுவர், கூரை என்ற அங்கங்களையும், மேற்பகுதி கர்ணகூடு, கூரை, கண்டம், சிகரம், கலசம், என்ற அங்கங்களையும் கொண்டதாகும். பெரும்பாலும் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும், மேற்பகுதி செங்கற்களாலும் அமைக்கப்படுகின்றது. காசியபம், மயமகம் போன்ற சிற்ப நூல்கள், கோபுரங்களில் இடம்பெறும் அங்கங்களையும், அவற்றின் அளவு முறைகளையும் குறிப்பிட்டுள்ளன. இவற்றிலே குறிப்பிடப்பட்டமைக்கமைய, கோபுரங்கள் பல அடுக்கக்களைக் கொண்டதாக அமைப்பர். கோபுர அமைப்பை அடுக்குக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒருநிலை, இருநிலை என்றோ அல்லது ஒரு தளம், இருதளம் என்றோ கூறுவர்.

இவ்வாறாக சிற்பநூல்களிலே கூறப்பட்டமைக்கு அமைய, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலின் இராசகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. தூரத்திலிருந்து பார்க்கக்கூடியவகையிலே இக்கோயிலின் இராசகோபுரம் கம்பீரமாக எழுப்பப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் கிழக்கு வாசலிலே அறுபத்தைந்தடி உயரங்கொண்ட இந்த இராசகோபுரத்திலே, அழகிய தெய்வசிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இக்கோபுரம் ஐந்து தளங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. அவ்வாறே அம்பாள் எழுந்தருளியுள்ள தெற்குவாயிலில், முப்பத்தைந்தடி உயரம் கொண்ட கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரம் மூன்று தளங்களைக் கொண்ட கோபுரமாகக் காணப்படுகின்றது. இவற்றோடு ஆலயத்தின் கிழக்கு, மேற்கு நுழைவாசல்களில் இரு சிறிய கோபுரங்கள் அமைந்துள்ளன.


இவ்வாறான வெளிஅமைப்புக்கள் காணப்பட, உள்மண்டபம் புராண வரலாறுகளைக் கொண்ட கலைநுட்பம் நிறைந்த காட்சிகளை எடுத்தியம்புகின்றது. உள்மண்டபக் கற்தூண்களிலும், சுவர்களிலும் கண்ணப்பநாயனார் தனது இடது கண்ணை தோண்டி இலிங்கத்திலே அப்ப ஆயத்தமாகும் காட்சி தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அம்பாளின் தாண்டவம், சிவனின் ஊர்த்துவதாண்டவம், இடபத்தில் உமையும் சிவனும், அருத்தநாரீஸ்வரர், வைரவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர், பிச்சாடனர், இராமர், நான்முகன், தட்சணாமூர்த்தி, மத்தளத்துடன் நந்திதேவர், நாரதர், பாயும் சிங்கம், அன்னப்பறவைகள், கலைமான், ஐந்து தலைநாகம், யானை, மரத்தை முறித்துக் கிளை உண்ணல், எருது, மரத்தை எட்டிக் குழை உண்ணல், ஐந்துதலை நாகலிங்கம், மந்தி, யானையின் காலடியில் மனிதன், மீனை விழுங்கும் கொக்கு, இரட்டைத்தலைக் கிளி, இரட்டைத்தலை மயில், யானைமேற் பாயும் சிங்கம், ஆடும் மயில், இருதலை ஒரு உடல் சிங்கம், மூன்றுதலை ஒரு உடற் கழுகு போன்ற சிற்பங்கள் கலைநுணுக்கத்தோடும் அழகோடும் அற்புதமாகக் காட்சியளிக்கின்றன.

சிவாகம முறைப்படி நடைபெறும் இவ்வாலயம் பூசை வழிபாடுகளோடு அமையாது சைவமும், தமிழும் தழைத்தோங்க அரும்பணியாற்றி வருகின்றது. அறநெறிப்பாடசாலை, சிவதர்ம சம்வர்த்தன வேதப்பாடசாலை என்பன ஆலயத்தின் மேற் பார்வையிலே நடத்தப்பட்டுவருவது, சிறந்த சமய சமூகப் பணியாகக் கொள்ள வேண்டும். பன்னிருதிருமுறைகள் சைவசமயத்தின் கண்களாகப் போற்றப்படுகின்றன. இவற்றை வருடாவருடம் ஓதுதல் ஆலயத்திலே நடைபெறுகின்றது. கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் நிறுவனராக விளங்கிய திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் அவர்களுடைய சந்ததி வழிவந்தவரான திரு. தே.ம. சுவாமிநாதன் அவர்கள், இவ்வாலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்து தொண்டாற்றி வருகின்றார். இவரோடு ஐந்துபேர் கொண்ட உறுப்பினர்களும் இணைந்து, இவ்வாலயத்தை திறம்பட நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான கலையம்சம் பொருந்தியதும், அருள்வீச்சினால் அனைவரையும் ஆட்கொண்டதுமான, கொச்சிக்டை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் அமைய காரணமாயிருந்த பெரியார் திரு. அருணாசலம் பொன்னம்பலமுதலியார் அவர்கள், தமிழ்சமூகத்திற்கு அளித்த பெருங்கொடையாகவே இக்கோயிலை வரலாறு போற்றுகின்றது.

கலைப்புலவர் கே. நவரத்தினம் அவர்கள் தனது நூலிலே, "The temple may be considered the Architectural gem of South Indian Art in Ceylon today. Visitors to the country pay a visit to this temple." னனக் குறிப்பிட்டுள்ளமை உற்றுநோக்கத்தக்கது. புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து செல்லும் தமிழ்மக்கள், இவ்வாறான ஆலயங்களை தரிசிப்பதோடு, எதிர்காலச் சந்ததியினருக்கும் இவ்வாறான ஆலயங்களை தரிசிக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**"குன்றேயுநல் கொழும்புநகர்**
**குலவும் கொச்சிக்கடையில்**
**நன்றேயுயர் திருக்கோயிலில்**
**நாளும் வீற்றேயிருக்கும்**
**அன்றேபுர மெரித்தான் பொன்னம்**
**பலவாணனைத் தொழுதால்**
**சென்றேவிடும் உமது வினை**
**சேர்ந்தே பயன் பெறுவீர்"**

*தொடரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# பழஞ் சோறு சாப்பிட்டால் அறுவை சிகிச்சைக்கு செல்லத்தேவையில்லை என்கிறார்கள் சென்னை மருத்துவமனை டாக்டர்கள்



பழஞ் சோறை தினமும் காலையில் உண்டால், குடல் சார்ந்த பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கிறது என்றும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் நோயாளிகளை அறுவை சிகிச்சை செய்யாமலே பழைய சோறு காப்பாற்றி வருவதாக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்காலிக நவீன உணவு வகைகளால் குடலுக்குக் கிடைக்க வேண்டிய தாது, இரும்பு, நார் சத்து மட்டுமல்லாமல் நன்மை பயக்கும் பாக்டீரியாக்களும் கிடைக்காத காரணத்தால் குடல் சார்ந்த பிரச்னைகள், மலச்சிக்கல், தூக்கமின்மை, செரிமான கோளாறு, மன அழுத்தம் என்று பல்வேறு நோய்கள் நம்மைத் தேடி, அழையா விருந்தாளியாக வந்து சேர்கின்றன. அரசு ஸ்டான்லி மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள்.

அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்குக் குடல் சார்ந்த பிரச்னைகளுக்காக வரும் நோயாளிகளைக் கொண்டு பழைய சோறு குறித்த ஆராய்ச்சி ஒன்ற நடத்தியுள்ளனர். அந்த ஆராய்ச்சியில், நாம் சாதாரணமாக நினைக்கும் பழைய சோறில் உடலுக்கு நன்மை பயக்கும் லாக்டோ பேசிலஸ். ஈஸ்ட், பைடோ பேக்டிரியல், ஸ்டெப்சோ, சேக்ரோ மைசிஸ் ஆகிய நுண்ணியிர்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். நம் உணவில் நன்மை பயக்கும் பாக்டீரியாக்கள் இல்லாததினால்தான் பலவித குடல் சார்ந்த வயிற்றுப் பிரச்னைகள் ஏற்படுகின்றன என்பதையும் கண்டறிந்துள்ளனர். பழைய சோறு மூலம் கிடைக்கப்பெறும் பாக்டீரியாக்கள் மூலம் பலரது குடல் சார்ந்த பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், குடல் சார்ந்த நோய் மட்டுமல்லாமல், தற்கால மனிதர்களை ஆட்டிப்படைத்து வரும் நீரிழிவு நோய்க்கும் பழைய சோறு அருமருந்தாகச் செயல்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பழைய சோறில் உள்ள நன்மை பயக்கும் பாக்டீரியாவால் இரத்தத்தில் உள்ள இன்சுலின் அளவு அதிகரித்திருப்பதையும் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நிலையில் அரசு ஸ்டான்லி மருத்துவமனையின் இரைப்பை குடல் அறுவை சிகிச்சை துறைக்கு அரசு 2.7 கோடி நிதி ஒதுக்கி, பழைய சோறில், மேலும் நன்மை பயக்கும் பாக்டீரியாவைக் கண்டுபிடித்து.

ஆராய்ச்சியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல maldi-tof என்ற இயந்திரமும் வாங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எது எப்படியோ... நவீன கால வாழ்க்கையில் மறக்கடிக்கப்பட்ட நன்மை பயக்கும் பழைய சோறை மீண்டும் நினைவு கொள்ள வைத்துள்ளது இந்தப் புதிய ஆராய்ச்சி முடிவு.

தினமும் காலை உணவாகப் பழைய சோறு, பச்சை மிளகாய் மற்றும் வெங்காயத்தை உண்டு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிகாண்போம்.






*(சென்ற வார தொடர்ச்சி...)* *(அத்தியாயம் 20)*


# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் பழையாற்றுப் பயணம்

பின்பு கோடிக்கரை பக்கத்துக் காடுகளில் சில உயர்ந்த மூலிகைகளை எடுத்து வர ஒரு வீரனை ஆயத்தம் செய்தனர். அந்த முதியவர், ‘என் மகனையும் அந்த வீரனுக்கு துணையாக அனுப்புகிறேன்’ என்றார். இலங்கையில் நல்ல மூலிகைகள் இருக்கின்றன. கோடிக்கரையில் கூட நல்ல மூலிகைகள் உண்டு என்றார். அதற்கு ஒரு கதை உண்டு. இலக்குமணனின் உயிரைக் காப்பாற்ற அனுமான் பர்வதம் கொண்டு வரும் போது கோடிக்கரை வழியாகத்தான் வந்தாராம். அப்பொழுது அங்கே சில மூலிகைகள் விழுந்தன அதனால்தான் கோடிக்கரையிலும் இன்று இப்படி பல மூலிகைகள் காணப்படுகின்றன. இலங்கையில் தான் அபூர்வமான மூலிகைகள் கிடைக்கின்றன. எப்படியாவது சக்கரவர்த்தியின் நோயை கட்டாயம் குணப்படுத்திவிடுவேன் என்றார் தலைமை வைத்தியர். வந்தியத்தேவனும், வைத்தியர் மகன் தினகபாணியும் வந்தார்கள் அப்போது வானதி வந்தியத்தேவனை அடையாளம் கண்டு கொண்டாள். குந்தவை தலைமை வைத்தியரிடம், ‘இவர்கள் சக்கரவர்த்திக்கு மூலிகை எடுக்கப் போகிறார்கள் இவர்களிற்கு உதவி தேவைப்பட்டால் அரசாங்க அதிகாரிகள் உதவி செய்ய வேண்டி கட்டளை ஓலைகளை அரண்மனைத் திருமந்திர அதிகாரிகளிடமிருந்து கிடைத்தன கோடிக்கரை கலங்கரை விளக்க காவலருக்கு ஓலை கொடுத்துவிட்டீரா?’ என்று கேட்டாள். அவரும் ஆமாம் என்றார். இளவரசிகள் யானை மீது ஏறினர் வந்தியத்தேவனும், வைத்தியர் மகனும் குதிரைமேல் ஏறினர் குந்தவை வந்தியத்தேவனுக்கு வரும் அபாயங்களைப் பற்றி எச்சரிக்கை செய்தாள். பின்னர் பயணத்தை தொடருமாறு சொல்ல வந்தியத்தேவன் குந்தவையை ஆவலுடன் பார்த்துவிட்டு தன் குதிரைக்கு சுளீர் என்று அடிகொடுக்க, அது நாலு கால் பாய்ச்சலில் பிய்த்துக் கொண்டு பறந்தது. குதிரை புறப்பட்டதும் யானையில் பயணித்த குந்தவை, ‘மன்னாதி மன்னர்களையும், வீராதி வீரர்களையும் நிராகரித்த என் மனம் வழிப்போக்கனாக வந்த இந்த வாலிபனிடம் ஏன் செல்கிறது?’ எனக் கலங்கினாள்.

அப்பொழுது மக்கள் குந்தவையிடம் பல கேள்விகள் கேட்க, அவளும் இலங்கைக்கு போர் புரியச் சென்ற வீரர்களையோ, பிறரையோ இளவரசர்கள் கைவிடமாட்டார்கள் என்று பதிலளித்தாள். பின்பு மக்களிடம் விடைபெற்று தன் மாளிகை நோக்கிச் சென்றாள். நாம் பழையாறை விட்டு மாமல்லபுரத்திற்கு செல்வோமா? மாமல்ல புரத்து வீதிகள் வழியாக இரட்டைக் குதிரைகள் பூட்டிய அழகிய விமான ரதம் அதில் சுந்தர சோழனின் மூத்த குமாரன் கரிகாலர், திருக்கோவிலூர் மலையமான் சுந்தர சோழருடைய பத்தினியான வானமா-தேவியின் தந்தை இவர் ஆதித்த கரிகாலனுடைய பாட்டனார். இவர் பெரும் அறிவாளி மற்றொருவர் பார்த்திபேந்திரன் இவன் பல்லவர் குல வழித்தோன்றல் ஆதித்தகரிகாலனுடன் வீரபாண்டியன் போரிடும் போது அவனுக்கு வலது கையாய் நின்று வெற்றியை நிலைநாட்டியவன் இதனால் ஆதித்தகரிகாலனின் அந்தரங்க நட்புக்கு இலக்கானவன். இவர்கள் மூவரும் தஞ்சாவூரிலிருந்து வந்த செய்திகளைப் பற்றி பேசிக்கொண்டு சென்றார்கள். அப்பொழுது கரி-காலர், ‘பழுவேட்டரையரின் அட்டகாசத்தை இனிமேல் என்னால் பொறுக்க முடியாது. நான் அனுப்பிய தூதன் மீது ஒற்றன் என்று குற்றம் சுமத்தி அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள்’ என்று அறிவித்திருக்கிறார்களாமே! இதை எப்படிப் பொறுக்க முடியும்? அப்பொழுது பார்த்திபேந்திரன் குறுக்கிட்டு, ‘அந்தப் பதற்றக்காரன் காரியத்தை கெடுத்துவிடுவான் அவனுக்கு வாளை வீசவும், வேலை எறியவும் தெரியும் புத்திக் கூர்மை கிடையாது’ என்றான். அதற்கு கரிகாலன் ‘பார்த்திபேந்திரா நான் இட்ட கட்டளைப்படி சக்கரவர்த்தியிடம் அவன் ஓலை கொடுத்துவிட்டான் இவன் புத்திசாலியில்லை என்று நீ சொல்வது நியாமா? தாத்தா உங்கள் கருத்து என்ன? ஒரு பெரும் படைதிரட்டி தஞ்சாவூர் சென்று சக்கரவர்த்தியை பழுவேட்டரையரிடமிருந்து மீட்டு காஞ்சிக்கு கொண்டு வருவோமா?’ என்றான். அதற்கு தம் வாழ்நாளில் அறுபத்தாறு போர்க்களம் பார்த்த திருக்கோவிலூர் மலையமான், ‘சற்று ரதத்தை நிறுத்தி உட்கார்ந்து பேசுவோம்’ என்றார். மூவரும் மாமல்லபுரத்து கடற்கரையோரம் அரண்மனை ஆசனங்கள் போல் அமைந்திருந்த கற்பாறைகளின் மேல் கால்களை தண்ணீரில் நனைத்தபடி அமர்ந்திருந்தார்கள்.

அப்பொழுது பல படகுகள் பண்டங்களைச் சுமந்துகொண்டு வந்தது. அந்தப் பண்டங்களை பாய் மரம் விரித்த பெரிய கலன்களில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த பாரத்திபேந்திரன், ‘இரட்டை மண்டலப் படையெடுப்பிற்காக சேகரித்து வைத்த பண்டங்களையெல்லாம் இலங்கைக்கு அனுப்புவதை நினைக்க மனம் வருந்துகிறது’ என்றான். கரிகாலனோ, ‘எனக்கு இரட்டை மண்டலப் போருக்கு வடக்கே படையெடுத்துச் செல்லாமல் தடுக்கும் பழுவேட்டரையர் நோக்கம்தான் எதுவென்று தெரியவில்லை என்று திகைப்பாய் இருக்கிறது’ என்றான். ‘எப்பொழுதும் திருக்கோவிலூர் மலையமான் பேசினால், என் பெயரைச் சொன்னால் காசினியில் சூரர்கள் எல்லோரும் நடுங்குவர். ஆயி-ரம் வருடத்து பழங்குடியைச் சேர்ந்த என்னை நேற்றைக்கு மேற்கில் இருந்து வந்த பழுவேட்டரையர்கள் ஒழித்துவிடமுடியுமா? அவர்கள் எதற்காக இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்பது உனக்குப் புரியும்படி சொல்கிறேன் கேள். இலங்கையில் போர் புரிந்து வெற்றிகொண்ட வீரர்களை பட்டினி போடாது உணவுப் பண்டங்களை அனுப்புவது நியாயமானதே! அதை சோழ நாட்டிலிருந்து நாகபட்டினத் துறைமுகத்தில் இருந்தே பாண்டிய நாட்டு சேதுக்கரையில் எற்றி அனுப்பாமல், நீ வடக்கே படையெடுத்து செல்லாமல் தடுத்து, இங்கிருந்து படைகளை அனுப்புகிறார்கள். எனென்றால் உன்னையும் உன் தம்பியையும் பலவீனப்படுத்துவதற்கே! இலங்கையில் உள்ள உன் தம்பி அருள்மொழி தோல்வியுற்று அவமானமடைந்து நிற்க வேண்டும். இதனால் நீ கோபம் கொண்டு அவனுடன் சண்டை போட வேண்டும். இதைக் கண்டு நான் உன் தாத்தா வேதனை அடைய வேண்டும். இது தான் அவர்கள் உள் நோக்கம் நண்பர்களோ, சகோதரர்களோ அன்பாக ஒற்றுமையாக இருந்துவிட்டால் அவர்களை சண்டைபோட உந்துவித்து வேடிக்கை பார்த்து அதை தங்கள் சுய நலத்திற்கு பயன்படுத்திக் கொள்வது சில கேடு கெட்ட மனிதர்களின் போக்கு. கரிகாலா இதனை நன்றாகப் புரிந்து கொண்டு நீ செயற்பட வேண்டும்’ என்று ஆவேசத்துடன் கூறினார். உடனே கரிகாலன் ‘தாத்தா இப்பொழுதே நான் இலங்கை செல்ல தயாராக இருக்கிறேன். என் தம்பி என்ன கூறப்போகிறான் என்று எண்ணி எண்ணித் துடித்துக் கொண்டிருக்கிறேன். எம்மை பிரிப்பது இயலாத காரியம் என்று அவர்களுக்குப் புரியும் படி செய்ய வேண்டும்’ என்றான். ‘அரசே இவரைக் கேட்டால் வேண்டாம் பொறு என்று புத்திமதி சொல்வார் நாம் நாளையே புறப்படுவோம்’ என்றான் பார்த்திபேந்திரன். ‘கரிகாலா இவன் முதலில் வாயை மூடட்டும் நீங்கள் இருவரும் வீராதி வீரர்கள் தான். கரிகாலா நீ பராக்கிரமசாலியும் கூட நீ எதிரிகள் கூட்டத்தில் புகுந்து தன்னந்தனியே சண்டையிட்டாய். சேவூர்ப் பெரும் போர் நடந்த போது உனக்கு வயது பதினாறு கூட ஆகவில்லை! ஆனால் நீ பகைவர்கள் கூட்டத்தில் புகுந்து சென்ற வேகம், உன் இரு கை வாள்கள் சுழன்ற வேகம், பகைவர்களின் வாள் உருண்ட வேகம் இன்னும் என் கண்முன்னே நிற்கிறது. அப்படிப்பட்ட வீரர்கள். உங்கள் இருவரின் பதற்றமும், முற்கோபமும் சிந்திக்கும் சக்தியை அழிக்கிறது. இதனால் நேர்மாறான காரியங்களைச் செய்துவிடுகிறீர்கள். இதனை எத்தனை தடவை உங்களிடம் நான் சொல்லியிருந்தேன். ஆனால் நீங்கள் செவி கொடுக்கவில்லை முதலில் அருள்மொழியை இலங்கையில் இருந்து அழைத்து வந்து உன்னுடன் வைத்துக்கொள். இலங்கை யுத்தம் ஒருவாறு ஒரு கட்டத்திற்கு வந்துள்ளது. அனுராதபுரம் அவர்கள் கைவசம் வந்துவிட்டது. அதைப் பாதுகாக்க தளபதிகள் உள்ளார்கள். இப்பொழுது நீங்கள் ஒன்று சேர்ந்து நின்று சோழ ராஜ்ஜியத்தை காப்பாற்ற வேண்டும். ஒன்றுபட்டால் தான் உண்டு வாழ்வு. நீ தைரியசாலிதான் ஆனால் மறைவில் நடக்கும் சதிகளிற்கும், சூழ்ச்சிகளுக்கும் பயப்பட்டே ஆக வேண்டும். அரச குலத்தில் பிறந்து சிம்மானசனத்திற்கு உரியவர்கள் இந்த விடயத்தில் மிக கவனத்துடன் இருக்க வேண்டும். தவறின் நாட்டிற்கு நாசம் திண்ணமே! கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் நடைபெற்ற சதிக் கூட்டத்தில் உள்ள சதி உனக்கும், உன் தம்பிக்கும் ராஜ உரிமை இல்லை என்றும் செய்துவிட்டு, மதுராந்தகனை சோழ நாட்டின் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க உன் தந்தையின் சம்மதம் பெற அவரைத் தஞ்சைக் கோட்டையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். இது தான் அவர்கள் அந்தரங்க நோக்கம். இதற்கான சூழ்ச்சியில் நாம் சிக்கிடக் கூடாது’ என்று கர்ச்சித்தார்.



இதைக் கேட்ட கரிகாலன் ஸ்தம்பித்து நின்றான். பார்திபேந்திரன் வாயடைத்து நின்றான. பின்னர் கோபங் கொண்ட கரிகாலன் ‘இது என்ன தாத்தா தங்கள் அறிவு கூடவா மங்கிவிட்டது’ என்றான். தாத்தாவோ, ‘மதுராந்தகன் முழு அசடன் கையில் வாள் எடுத்து அறியாத சிவபக்தன். நாலு வார்த்தை பேசத் தெரியாதவன். பெண்ணாகப் பிறக்கத் தவறி ஆணாகப் பிறந்தவன். இவனுக்கு இந்த இராஜ்ஜிய உரிமையில்லை. பன்னிரண்டு வய-தில் போர்க்களத்தில் புகுந்து வீர பாண்டிய தலை கொண்ட சிங்கம் வீராதி வீரர் ஆதித்த கரிகாலனிற்குத்தான் உரிமை’ என்றார். உடனே கரிகாலன் குறுக்கிட்டு ‘இந்த ராஜ்ஜியம் எனக்கு ஒரு பொருட்டல்ல என் கை வாளின் உதவி கொண்டு பத்து இராஜ்ஜியங்களைத் தாபித்துக் கொள்வேன். இதில் நியாயம் எப்படி முதலில் மதுராந்தகனுக்கு என்று சொல்லி இருந்தால் நான் குறுக்கே நிற்க மாட்டேன். நாடு நகரம் அறிய மக்கள் அறிய எனக்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு இன்று மாறுவது நியாயமா?’ மலையமான் ஆ-வேசம் கொண்டு, ‘கரிகாலா நீ இராஜ்ஜியத்தை மதுராந்தகரிற்கு கொடுப்பதற்கு சம்மதித்தால் உன்னை என் வாளால் கண்டதுண்டமாக வெட்டுவேன். உன் தாயை வெட்டுவேன் என் கையால் என்னை வெட்டுவேன். இந்த சோழ ராஜ்ஜியம் உன்னை விட்டுப் போக விடேன்’ என்றவாறு கத்திக்குள் கையை விட்டார். கரிகாலன், ‘தாத்தா உங்கள் எண்ணம் இப்படி என்றால் ஏன் தயக்கம் உடனே படையைத் திரட்டி போரிற்கு போவோம் பழுவேட்டரையர் அவர்களைளச் சார்ந்த மழுவரையர், சம்புவரையர். முத்தரையர், முனை-யரையர் எல்லோரையும் ஒழித்துவிட்டு தஞ்சைக் கோட்டையைப் பிடிப்போம். மதுராந்தகரை சிறையில் அடைப்போம் சக்கரவர்த்தியை விடுதலை செய்வோம். இதற்கு தங்கள் ஆதரவு ஒன்றே போதுமானது. நானும் பார்த்திபேந்தனும் புறப்படுவோம்’ என்றான். ‘உங்களைப் போரில் வெல்ல யாரால் முடியும்? சூழ்ச்சியும், சதியும் சேர்ந்து எதிர்த்தால் அது என்னவென்று கேட்கும் உங்கள் பார்வைக்குப் பதில், பெற்ற தந்தையிடம் மகன் யுத்தம் செய்ய வருகிறார் என்று கதை கட்டிவிடுவார்கள். அதனால் உன் தந்தை உயிர் விட்டு விடுவார். பழிச்சொல் தாங்காது நீ சுருண்டு விடுவாய். அவர்கள. வென்று விடுவார்கள்’ என்றார் மலையமான். ஆதித்தகரிகாலன் தன் செவி-களைப் பொத்தியபடி, ‘தாத்தா இதற்கு என்ன உபாயம்’ என்றான். ‘முதலில் இலங்கைக்கு நம்பிக்கையான ஆளை அனுப்பி, அருள்மொழியை இங்கு அழைத்து வா. அருள்மொழி போர்க் களத்தையோ, போர் வீரர்களையோ விட்டு விட்டு வருவது கடினம். அவனுக்கு இதை எடுத்துச் சொல்லி அழைத்து வரும் ஆற்றலுள்ளவர்களை அனுப்பு’ என்றார் மலையமான். உடனே பார்த்திபேந்திரன், ‘உங்கள் சம்மதத்துடன் நான் செல்கிறேன்’ என்றான். அதற்கு கரிகாலன், ‘உன் விருப்பப்படி செய்’ என்றான். மலையமானோ, ‘வந்தியத்தேவன் போல் தேவையில்லாத காரியங்களில் தலையிடலாகாது’ என்றான். உடனே தாத்தா அவனைப் பற்றிய விபரங்களை எப்படி தெரிந்து கொண்டீர்கள்? கடம்பூர் மாளிகை விருந்திற்கு எனக்கு அழைப்பு வரவில்லை அங்கு விருந்திற்கு சென்ற குன்றத்தூர் கிழாரை வழியில் சிறைப்படுத்தி என் மலைக் கோட்டையில் சிறைக்கு கொண்டு சென்றேன். அவனிடமிருந்து அங்கு நடந்தவை எல்லாம் தெரிந்து கொண்டேன். அப்போதுதான் வந்தியத்தேவன் கூட்டத்தில் கலந்து கொண்டான் என்றும், கந்தமாறனின் நண்பன் இறுதியில் நண்பனின் முதுகில் குத்திவிட்டு தப்பிச் சென்றான் என்றும், பழுவேட்டரையர்கள் அவனைத் தேடுகிறார்கள் என்றும் அறிந்தேன். கரிகாலன், ‘வந்தியத்தேவன் ஒருபோதும் அப்படிச் செய்யான். வந்தியத்தேவன் எமக்குத் துரோகம் செய்து எம் எதிரிகளுடன் சேரமாட்டான்’ என்றான். பார்த்திவேந்திரனோ ‘அழகான பெண்களைக் கண்டால் மட்டும் அவன் தலை கிறுகிறுத்துவிடுமே!’ என்றான். ‘அதனாலேதான் என் தமக்கை குந்தவையிடம் ஓலை கொடுக்க அவனை அனுப்பினேன்’ என்றான் கரிகாலன். ‘என் தமக்கையைப் பார்த்தால் அவர் வதனம் அவனின் உள்ளத்தில் பதிந்துவிடும்’ என்றான். ‘இதை நானும் ஒத்துக்கொள்கிறேன் ஆனால் குந்தவையைப் பார்க்கும் முன் நந்தினி தேவி-யை பார்க்க நேர்ந்தால்?’ என்று பார்த்திபேந்தன் சொல்லும் பொழுது கரி-காலன் கண்களில் பொறி பறந்தது.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**

**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**

**மாதினி நிமலன**

---

# இவ்வார ராசிபலன்

**16-07-2021 வெள்ளி தொடக்கம் 22-07-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** வெளியூர் பயணத்தால் வெகுமதி கிடைக்கக்கூடிய வாரம். சோதனைகள் நீங்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை மாற்றம் தரும். வாழ்வு நிலை உயரும். மனைவி சலசலப்பு ஏற்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவால் பணவிரயம் ஏற்படும். கல்வியில் கவனம் குறையும். லாபம் திருப்தி தரும். வசதிகள் கூடும். உடல் ஆரோக்கியம் குறையும். மனவேதனை குறையும். வலம்புரி வழிபாடு வளம் சேர்க்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பாதள பைரவர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உடல் நிலையில் கவனம் தேவை. பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்து கொள்வீர்கள். புதுத் தொழிலை ஆரம்பிக்க முன்வருவீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்து கொள்வீர். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லாத பயங்கள் நீங்கும். மனதைரியம் கூடும். உற்சாகம் கூடும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர லட்சுமி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**மிதுனம்:** அஷ்ட ஐஸ்வர்யங்கள் சேரக்கூடிய அற்புதமான வாரம். ஆக்கப் பூர்வமான நாள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. மங்கல செய்தி வரும். முயற்சி பலன் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: எமதர்மராஜா, அதிர்ஷ்ட எண்: 9,4,8,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கடகம்:** மறுப்பே இல்லாத மாற்றங்கள் கிடைக்கக்கூடிய மகத்தான வாரம். பெருமிதம் நிறைந்த நாள். புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுப காரியம் கைகூடும். சந்தோஷம் பெருகும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தர்மதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**சிம்மம்:** தார்மீக எண்ணங்கள் உதயமாக கூடிய உன்னதமான வாரம். தந்திரமாக செயல்படுவீர்கள். கலைத் தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச் சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடிவரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமதேனு, அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**கன்னி:** ஆலய தரிசனத்தால் ஆத்மபலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு, கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். பொருளாதார சிக்கல் நீங்கும். சிரமங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹேரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,8,2,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**துலாம்:** சந்தோஷமான நிகழ்வும் சாதகமான சூழ்நிலையும் உள்ள வாரம். பெருமிதம் நிறைந்த நாள். புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுப காரியம் கைகூடும். சந்தோஷம் பெருகும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: எமதர்மராஜா, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**விருச்சிகம்:** பூமியால் லாபமும் புத்திர யோகமும் கிடைக்கக்கூடிய வாரம். சாதனை படைக்கும் நாள். நிர்வாக செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத் தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியைத் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராமபிரான், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**தனுசு:** பணிவான பேச்சுக்களால் பணவரவை சேர்த்துக் கொள்ளக்கூடிய வாரம். பாராட்டுக்கள் கூடும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்ரத்தாழ்வார், அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** தேவைகள் பூர்த்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். பொருளாதாரம் உயரும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச் செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நடராஜப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** போட்டி பொறாமைகள் மறையக் கூடிய மகத்தான வாரம். நன்மைகள் பெருகும் நாள். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் கூடும். திறமைகள் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் மறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஐம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மீனம்:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய பகட்டான வாரம். தந்திரமாக செயல்படுவீர்கள். கலைத் தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச் சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடிவரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமதேனு, அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

---

## 'இந்தியாவிற்கு என தேசிய மொழி எதுவும் கிடையாது' – அலுவல் மொழித்துறை தகவல்

இந்தியாவிற்கு தேசிய மொழி என்ற ஒன்று கிடையாது என மத்திய அலுவல் மொழித்துறை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தெரிவித்துள்ளது.

சமீப காலமாக தமிழ்நாட்டில் இருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மத்திய அரசிடம் ஆங்கிலத்தில் கேட்கப்படும் கேள்விக்கு இந்தியில் பதில் வருவதாக புகார் எழுந்துள்ளது.

இந்நிலையில், தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த பாண்டியராஜா என்னும் சமூக ஆர்வலர் இரண்டு மாதத்திற்கு முன்பு, ரயில் மோதி யானைகள் உயிரிழப்பது தொடர்பாக ஆங்கிலத்தில் கேட்ட கேள்விகளுக்கு, பல்வேறு வட மாநிலத்தைச் சேர்ந்த ரயில்வே கோட்டங்கள் ஆங்கிலத்துக்கு பதிலாக இந்தியில் பதில் அளித்துள்ளன. அதேபோல திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவருக்கு சென்னை விமான நிலையம் சம்பந்தமாக இந்தியில் தகவல் தெரிவிக்கப்பட்டதும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதுமட்டும் அல்லாமல் பல்வேறு காலகட்டங்களில் தமிழக எம்பிக்களுக்கு மத்திய அரசு அதிகாரிகள் இந்தியில் பதில் அளித்து இருந்ததும், தமிழ்நாட்டில் கடந்த சில வருடங்களாக தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, மத்திய அரசு அலுவலகங்கள் மூலம் இந்தி திணிக்கப்படுவதாகவும் புகார் எழுந்துள்ளது.


இந்நிலையில் சமூக ஆர்வலர் பாண்டியராஜா தேசிய மொழி என்று, ஏதாவது இருக்கிறதா, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஆங்கிலத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு எந்த மொழியில் தகவல் அளிக்க வேண்டும் என்று சில கேள்விகளை மத்திய அலுவல் மொழித்துறையிடம் கேட்டிருந்தார். இந்த கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதில் அளித்த மத்திய அலுவல் மொழித்துறை, இந்தியாவிற்கு என தேசிய மொழி எதுவும் கிடையாது என தெரிவித்துள்ளது.

மேலும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், ஆங்கிலத்தில் கேள்வி எழுப்பினால் எந்த மொழியில் பதிலளிக்க வேண்டும் என்பது தொடர்பாக மத்திய அலுவல் மொழித்துறை எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

தகவல் தரும் அதிகாரி ஆங்கிலத்தில் கேட்ட கேள்விக்கு இந்தியில் பதிலளித்தால் அவருக்கு எந்த தண்டனையும் கிடையாது எனவும் அலுவல் மொழி விதிகள் 1976 தமிழ்நாட்டிற்கு பொருந்தாது எனவும் பதில் அளித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த பாண்டியராஜா, தகவல் அறியும் உரிமை சட்டத்தில் இந்தி திணிக்கப்படுவதை உடனடியாக தடுக்க வேண்டும் என்றும், இது தொடர்பாக தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் உடனடியாக மத்திய அரசுக்கு கடிதம் எழுத வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளார். மேலும் தமிழக எம்பிக்கள் அனைவரும் வரும் 19ம் தேதி தொடங்க இருக்கும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து இந்தி திணிப்பை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

**- திருநெல்வேலியில் இருந்து மணிராஜ்**



## ஜீவன் முக்தி (பகுதி ) 118

# வாழ்க்கையின் லட்சியம் ஞானமடைதல்

### லட்சியத்தைக் கவிழ்த்த கட்டுறு மனப்பாங்கு

ஏன் நமக்கெல்லாம் லட்சியத்தை பற்றிய தெளிவு இல்லாமல் போனது?
காரணம், கட்டுரு மனப்பாங்கு. அதாவது, Conditioning.
இந்தன் கட்டுறு மனப்பாங்குதான் நம்முடைய லட்சியத்தை நாம் தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளமல் வாழ்வதற்கான காரணம்.

இந்தக் கட்டுறு மனப்பாங்கு என்ற வார்த்தையை ஆழந்து புரிந்து கொள்ள வேண்டும்
பிறக்கும்போது நீங்கள் தமிழரோ, தெலுங்கரோ மலையாளியோ, கனடியரோ, ஆங்கிலேயரோ அல்ல. பிறக்கும்போது, இந்தப் பூவுலகிற்கு வந்த விருந்தாளி நீங்கள்.

தூரதிர்ஷ்டவசமாக, பூவுலகம் மாதிரி, ஜீவன்களை அசிங்கம் செய்கின்ற, அவமானம் செய்கின்ற மற்றொரு உலகத்தை நான் பார்க்கவில்லை... தவறிப்போய் இந்த உலகத்திற்கு வந்துவடடார்கள் என்பதற்கான, அந்தக் குழந்தைகளை என்ன பாடுபடுத்துகிறார்கள்?

நீங்கள் பிறக்கும்போது ஒரு ஜீவன் ஆனந்தமான வாழ்க்கையை வாழ்வதற்காக, துள்ளித் திரவதற்காக, பறந்து ரசிப்பதற்காக, பூமிக்கு வந்த ஒரு பரமஹம்சம்... ஏதோ ஒரு காரணத்தால் பிறந்தது மட்டும் இல்லாமல் பூமிக்கும் வந்துவிட்டீர்கள். அங்குதான் பிரச்சினையே

பிறந்த உடன், பொறி வைத்துப் பிடிப்பதற்கு, நிறையப் பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.... பிறந்த உடனேயே, முதலில் தேசத்தாலும், மொழியாலும், இனத்தாலும், மதத்தாலும் உங்களை கட்டுறுத்தும் மனப்பாங்குக்குள்ளே சமுதாயம் உங்களை அடைக்கின்றது.

கட்டுறு மனப்பாங்கு, கட்டுறு மன அமைப்பைத்தான் ஆங்கிலத்தில் Conditioning என்று சொல்கிறேன்.

### தேவையில்லாத சீர்வரிசை ஸ்ரீ கட்டுறு மனப்பாங்கு

நீங்கள் பிறக்கும்போது ஒரு இந்து கிடையாது. கிறிஸ்துவர் கிடையாது. ஒரு இனிமையான ஜீவனாக பூமிக்கு வந்திருக்கிறீர்கள்.

பிறந்தவுடன் நீங்கள் பணக்காரன் கிடையாது. 'ஏழை' கிடையாது. படித்தவன் கிடையாது. படிக்காதவன் கிடையாது. புதிதாகப் பிறந்த ஒரு ஜீவன். அவ்வளவே!
ஆனால் சமுதாயம் என்ன செய்கிறது? உங்களைக் கட்டுப் படுத்த ஆரம்பிக்கிறது.
சமுதாயத்திற்கு தேவை என்ன? கிளார்க்குகளும், வேலையாட்களும்தான்.

அதற்காக, இப்போது அதைத் தயார் செய்கிற லேலையை, உங்களின் மேல் திணிக்க ஆரம்பிக்கிறது.
நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்... உங்களுடைய உணர்வைப் பற்றியோ நீங்கள் அடைய வேண்டிய உச்ச நிலையைப் பற்றியோ, சமுதாயத்திற்கு கவலையே இல்லை.

நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள் ..... உங்களுடைய உணர்வைப் பற்றியோ, நீங்கள் அடைய வேண்டிய உச்ச நிலையைய பற்றியோ, சமுதாயத்திற்குக் கவலையே இல்லை. பாவம், அவர்களைக் குறை சொல்வித் தப்பில்லை. அவர்களுக்கும் அது தெரியாது.
உங்களின் அப்பாவோ, அமன்மாவோ உங்களுக்குத் துரோகம் செய்ய வேண்டும் என்று வேண்டுமென்றே கட்டுப்படுத்துவதில்லை.
பாவம் அவர்களுக்கும் அந்தப் புத்திசாலித்தனம் இல்லை.
அவர்கள் என்ன செய்வார்கள்?
தனக்கு என்ன கற்றுக் கொடுக்கப்பட்டதோ அதை உங்களுக்குக் கொடுத்தார்கள்.
இதில் பாவம் என்னவென்றால், காலம் காலமாக வழிவழியாக, அடுத்தடுத்த சந்ததிக்கு அளிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்ற, தேவையில்லாத ஒரு சீர்வரிசைதான் இந்தக் கட்டுறு மனப்பாங்கு.
என்னுடைய அம்மா எனக்குக் கொடுத்தார்கள். எனக்கு வேறு ஒன்றும் தெரியாது. அதனால் அதையே என் குழந்தைகளுக்கு கொடுத்துவிடலாம் என்று முடிவெடுப்பது.

### உங்களுக்க தேவையில்லாது செய்யப்படுகிற ஒரே துரோகம்தான் கட்டுறு மனப்பாங்கு.

உங்களுக்கு எமன் கட்டிவிடும் பாசக்கயிறுதான் கட்டுறு மனப்பாங்கு
கட்டுறுத்தப்படும் மனப்பாங்குதான் ஒரு ஜீவனுக்கு அளிக்கப்படும் மிகப் பெரிய துரோகம்.
இது ஒன்று மாற்றி ஒன்று நடந்துகொண்டே இருக்கும் உங்களுக்கு பெற்றோரால்தான் parental conditioning முதலில் நடக்கும்.
அதன் பிறகு வருவது, சமுதாயததால் வரும் இரண்டையும் பார்த்துவிட்டு, நாமே நமக்கு உருவாக்கிக் கொள்வதுதான் கட்டுறுமனப்பாங்கு
இந்த மாதிரி ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கடுக்காக பல்வேறு விதமான கட்டுறு மனப்பான்மையை உருவாக்கிக் கொள்வதனால், conditioning னால்தான் சத்தியத்தை, நம்மால் உள்ளவாறு நேரடியாகப் பார்க்க முடிவதில்லை.
லட்சியத்தை நாம் உடனடியாக உணரமுடிவதில்லை. லட்சியத்தை நம்மால் வாழ முடிவதில்லை.

லட்சியத்தை நாம் வாழாமல் போவதற்குக் காரணமே இந்தக் கட்டுறு மனப்பான்மையில் மாட்டிக் கொண்டு நாம் என்கின்ற தெளிவே இல்லாமல் போய்விட்டது.
நம்மீது போடப்பட்டுள்ள கட்டுக்களையே நாம் என்று நினைத்துக் கொள்கிறோம்.

பலபேர் போட்டுக்கொள்கின்ற உடையையே, தான் என்று நினைத்துக்கொள்ளிறார்கள்.
கொடுமையான ஒரு பழமொழி, ஆள்பாதி ஆடை பாதி என்று. ஆடை எப்படி பாதியாக முடியும்?

கழற்றிப் போடுகின்ற ஆடையை, பாதி என்று ஒருவர் நினைத்தால் என்றால் அவர் மீதி ஆள்கூட கிடையாது. மொத்தமே பாதிதான்.

ஆள்பாதி, ஆடைபாதி கிடையாது. இருப்பது மொத்தமும் ஒன்றுதான். அது ஆள்மட்டும்தான். ஆனால் இந்தக் கட்டுறுமனப்பாங்கு மனித மனத்திற்கு செய்யப்பட்டிருக்கின்ற மிகப்பெரிய துரோகம்.

ஆழ்ந்து பார்த்தீர்களானால் நீங்கள் பல்வேறு விதத்திலும், நரகத்திற்கு ஆளாகிக் கொண்டிருப்பதற்கக் காரணமே கட்டுறு மன அமைப்புத்தான்.
ஆரம்பத்தில், சில கட்டுறு மன அமைப்பை, சமுகத்தில் வாழ்வதற்கான தேவைக்காக ஆரம்பிக்கிறார்கள்.
ஒரு தமிழன், ஆங்கிலேயன். கன்னடியன் என்று தெரிந்து கொண்டால், அந்த மொழியைக் கற்றுக் கொண்டால் சமுகத்தில் வாழ முடியும். அந்த சமுகத்தில் சேர்ந்து எளிமையோடு வாழ முடியும்.

ஒருவரோடு தொடர்வு கொள்வதற்காக, ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதில் தவறே இல்லை. ஆனால், அந்த மொழியோடு ஏற்படுகின்ற பற்று, கட்டுறு மன்ப்பான்மையினால் தன்னுடைய வாழ்க்கையே அதுதான் என்று நினைத்துக் கொண்டு அதற்காக வாழ்க்கையையே துக்கமாக்கிக் கொள்கிறார்கள். பாருங்கள். அந்த மனநிலைதாய் கொடுமையான துக்கம்.

ஒரு மொழிக்காக இறந்தோர் மட்டும் லட்சக்கணக்கானோர். ஒரு மதத்திற்காக இறந்தோர் எல்லையே இல்லை. சொல்லவே முடியாது. ஒரு தேசத்திற்காக இறந்தோர் கோடிக்கணக்கானவர்.

கட்டுறு மனப்பாங்கு மட்டும் மனித குலத்தில் இல்லாமல் இருந்தால் மனித குலத்தின் வாழ்க்கை வரலாறே வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும். இத்துணை கோடி மரணங்கள் நிகழ்ந்திருக்காது.

மனித குலத்தில் தீவிரவாதம் என்று ஆரம்பிப்பதே, கட்டுறு அமைப்பால்தான். அதில் தான் தீவிரவாதமே ஆரம்பிக்கிறது.
என் இனம், என் மதம், என் ஜாதி, என் மொழி என்பதையெல்லாம் தாண்டி என் கட்சி என்று படிப்படியாக கட்டுறு அமைப்பு கொடுமையாக வளர்ந்து கொண்டே செல்கிறது.
இந்தக் கட்டுறு மனப்பான்மையினால்தான், இந்த வாழ்க்கையில். இருக்கிற அத்தனைவிதமான கட்டுக்களும், துக்கமும் வந்து வாய்க்கிறது.

எமனுடைய பாசக்கையிறு கடைசி நேரத்தில்தான் உங்கள்மேல் வீசம்படுகிறது என்று நினைக்காதீர்கள்.
எப்போது கட்டுறு மனப்பாங்கு உங்களுக்குள் நடக்கத் துவங்கி விட்டதோ, கட்டுறு மனப்பாங்கு எப்போது ஆரம்பிக்கிறதோ, அப்போதே எனனுடைய பாசக்கையிறு உங்களைச் சுற்ற ஆரம்பித்துவிட்டது.

### காலனாலும் உங்களைக் கட்டுப்படுத்த முடியாது.

இராமகிருஷ்ணர் மிக அழகான ஒரு கதையைச் சொல்வார். ஒரு குளத்தங்கரையில் ஒரு பிரமராஷஸன் உட்கார்ந்து இருந்ததாம். அதற்கு நீளமான ஒரு முடி இருக்குமாம்.
அது என்ன செய்யுமாம். யார் அங்கு குளிக்க வந்தாலும், அந்த முடியின் ஒரு முனையை எடுத்து குளிக்கிறவர்களின் கால்களில் அவரகளுக்குத் தெரியாமல் சுற்றிவிட்டு விடுமாம். அவர்கள் குளித்துவிட்டு எங்கே போனாலும், அந்த முடியும் அதற்கேற்றாற்போல் நீளமாகிக் கொண்டே இருக்குமாம்.
இந்த பிரம்ம ராஷஸனுக்கு எப்போது பசி எடுக்கிறதேதோ அப்போது என்ன செய்யுமாம், இந்த முடியைப் பிடித்து இழுக்க ஆரம்பிக்குமாம். இழுத்த உடனே மனிதர்கள் என்ன ஆவார்கள்? இழுத்த இழுப்பிற்க அந்த மனிதன் வருவான். அப்போது அவனை சாப்பிட்டு விடுமாம்.

இராமகிருஸ்ணர் இந்த உதாரணத்தை எதற்கு சொல்கிறாரென்றால், ஒரோயொரு முறை நீங்கள் சென்று, ஒரு ஞான சத்குருவைப் பார்த்து விட்டீர்கள் என்றாலே அவருடைய ஒரு முடியைக் காலில் கட்டி விடுவாராம்.
கட்டிவிட்டால், நான்கு வருடம் கழித்து என்றாலும் ஏதோ ஒரு காரணத்திற்காக என்ன செய்யும், பிடித்து இழுத்து கொண்டு வந்து விடும்.
அது வயிற்று வலியா, வாய் வலியா, தலை வலியா, என்ன வலியோ? காரணம் தெரியாது. ஏதோ ஒரு காரணத்திற்கு என்ன செய்யும்? திரும்ப சத்குருநாதனை நோக்கி இழுத்து வந்துவிடும். அதுதான் கதையை அந்த முடியினுடைய சக்தி. இந்தக் கதையை இராமகிருஷ்ணர் மிக அழகாகச் சொல்வார்.
காலனும் என்ன செய்கிறான், இந்தக் கட்டுறு மனப்பாங்கு எப்போது உருவாகிறதோ, அப்போதே பார்த்தீர்களென்றால், அந்த வினாடியே கழுத்தில் கட்டி விட்டுவிடுகிறான். உங்களின் உடலில கட்டி விடுகிறான். இந்த பாசக் கையிறுதான் கட்டுறு மனப்பாங்கு.

*(தொடரும்...)*

----

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.
எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# அன்பின் தொனி - 617

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்**

கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன், கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன். அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன், அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன். என் ஆவி என்னில் தியங்கும்போது, நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர், நான் நடக்கிற வழியில் மறைவாக எனக்குக் கண்ணிவைத்தார்கள். வலதுபுறமாய்க் கண்ணோக்கிப்பாரும், என்னை அறிவார் ஒருவரும் இல்லை, எனக்கு அடைக்கலமில்லாமற்போயிற்று, என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை. கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர் என்றேன். என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன், என்னைப் பின்தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள். உமது நாமத்தை நான் துதிக்கும்படி, என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும், எனக்கு நீர் தயவுசெய்யும்போது நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள். **- சங்கீதம் 142: 1-7**

**கர்த்தாவே, நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன்**

என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத் திரம். அவர் என் தயாபரரும், என் கோட்டையும், என் உயர்ந்த அடைக்கலமும், என்னை விடுவிக்கிறவரும், என் கேடகமும், நான் நம்பினவரும், என் ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமாயிருக்கிறார். கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும், மனுபுத்திரனை நீர் எண்ணுகிறதற்கும், அவன் எம்மாத்திரம்? மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான், அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானம். கர்த்தாவே, நீர் உமது வானங்களைத் தாழ்த்தி இறங்கி, பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும். மின்னல்களை வரவிட்டுச் சத்துருக்களைச் சிதறடியும், உமது அம்புகளை எய்து அவர்களைக் கலங்கடியும். உயரத்திலிருந்து உமது கரத்தை நீட்டி, ஜலப்பிரவாகத்துக்கு என்னை விலக்கி இரட்சியும். மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும். கர்த்தாவே, நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன், தம்புரினாலும் பத்துநரம்பு வீணையினாலும் உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். நீரே ராஜாக்களுக்கு ஜெயத்தைத் தந்து, உமதடியானாகிய தாவீதைப் பொல்லாத பட்டயத்திற்குத் தப்புவிக்கிறவர். மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும். அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக்கன்றுகளைப்போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப்போலவும் இருப்பார்கள். எங்கள் களஞ்சியங்கள் சகலவித வஸ்துக்களையும் கொடுக்கத்தக்கதாய் நிரம்பியிருக்கும், எங்கள் கிராமங்களில் எங்கள் ஆடுகள் ஆயிரம் பதினாயிரமாய்ப் பலுகும். எங்கள் எருதுகள் பலத்தவைகளாயிருக்கும், சத்துரு உட்புகுதலும் குடி யோடிப்போகுதலும் இராது, எங்கள் வீதிகளில் கூக்குரலும் உண்டாகாது. இவ்விதமான சீரைப்பெற்ற ஜனம் பாக்கிய முள்ளது, கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது.
**- சங்கீதம் 144: 1-15**

**கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர்**

ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன். நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார், அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது. துலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச்சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள். உம்முடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையுங்குறித்துப் பேசுவேன். ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள், உம்முடைய மகத்து வத்தை நான் விவரிப்பேன். அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள். கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர், அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது. கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும், உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள். மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு, உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள். உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது. கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார். எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது, ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர். நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர். கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைக ளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார். என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக, மாம்சதேகமுள்ளயாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக்கடவது.
**- சங்கீதம் 145: 1-21**

**அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார்**

அல்லேலூயா, என் ஆத்துமாவே, கர்த்தரைத்துதி. நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத்துதிப்பேன், நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தம்பண்ணுவேன். பிரபுக்களையும், இரட்சிக்கத்திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பா தேயுங்கள். அவனுடைய ஆவிபிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான், அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம். யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ளயாவையும் உண்டாக்கினவர், அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர். **- சங்கீதம் 146: 1-6**

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)










# உதயன் UTHAYAN

25 வது வெள்ளி விழா 2021




உதயம் 1319 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday July 16, 2021



## இலங்கையில் மீண்டும் இலக்கு வைக்கப்படும் தமிழ் ஊடகவியலாளர்கள்

- சிவா பரமேஸ்வரன்

சரியாக ஆறு மாதங்களுக்கு முன்னர் ஐ நா மனித உரிமைகள் ஆணையரிடமிருந்து இலங்கையில் நிலவும் சூழல்கள் குறித்து கடுமையாக விமர்சித்து அறிக்கை ஒன்று வெளியானது. அரசால் முன்னெடுக்கப்படும் துன்புறுத்தல்களும் அட்டூழியங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை வலியுறுத்தியது.

'இலங்கையில் மனித உரிமை செயல்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தார் ஆகியோர் மீது அரசு அல்லது அரசின் அங்கமாக இருக்கும் அமைப்புகள் மூலம் முன்னெடுக்கும் அனைத்து வகையான கண்காணிப்பு, அச்சுறுத்தும் விஜயங்கள், துன்புறுத்தல்கள் ஆகியவற்றை உடனடியாக நிறுத்தி, சிவில் சமூகத்தின் நியாயமான நடவடிக்கைகளுக்கு சட்டரீதியான தடைகள் விதிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் ஆணையர் வலியுறுத்துகிறார்" என்று அந்த அறிக்கை கூறியது.

*(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)*

## கனடாவின் பேரி நகரில் இயற்கையின் கோரத் தாண்டவம்.. வீடுகள் வர்த்தக நிலையங்கள் பலத்த சேதம்



கனடாவின் பேரி நகரில் நேற்று வியாழக்கிழமை மாலை நிகழ்ந்த கடும் சூறாவளியாகத் தோன்றிய இயற்கையின் கோரத் தாண்டவத்தால் பல வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியன பலத்த சேதத்துள்ளாகியன. அதனால் வீட்டுரிமையாளர்களுக்கும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் இலட்சக் கணக்கான டாலர் மதிப்புள்ள இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

## கனடா "உலகத் தமிழர்" பத்திரிகை ஆசிரியர் கமல்வாசன் அவர்களின் தாயார் யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தினார்



கனடாவில் பல ஆண்டுகளாக வெளி-வரும் "கனடா உலகத் தமிழர்" பத்திரிகை ஆசிரியர் கமல்வாசன் (கமல்) அவர்களின் தாயார் அரியமலர் (பேபி) நவரத்தினம் அவர்கள் தாயகத்தில் இயற்கை எய்தினார் என்ற துயரம் தரும் செய்தியை எமது வாசக அன்பர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும். அனுதாபம் தெரிவிக்க விரும்புவோர் கமல் அவர்களை 416 303 7675 என்னும் இலக்கத்தில் தொடர்புகொள்ளலாம்.

## கனடாவில் இஸ்லாமிய குடும்ப உறுப்பினர்கள் மீது மீண்டும் தாக்குதல் முயற்சி

கனடாவின் ஹமில்ரன் நகரத்தில் கடந்த திங்கட்கிழமை ஒரு இஸ்லாமிய குடும்ப உறுப்பினர்கள் மீது மீண்டும் ஒரு தாக்குதல் முயற்சி இடம்பெற்றுள்ளது. ஒரு இஸ்லாமிய குடும்பத்தின் தாயும் அவரது மகளும் மதரீதியான அவதூறுகளையும் அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டதைத் தொடர்ந்து குற்றச் செயலாக கருதப்பட்டு மேற்படி சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்ட 40 வயது நபர் ஒருவர் ஹமில்ரன் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

## இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ள பெரும்பான்மையின கல்வியாளர்களும் வர்த்தகர்களும்

இலங்கையில் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைகளால் தொடர்ந்து அங்கு வாழ முடியாத நிலை தோன்றும் என்று எண்ணியுள்ள பெரும்பான்மையின கல்வியாளர்களும் வர்த்தகர்களும் இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய கோட்டாபாய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து 600,000க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் குறிப்பாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள் ஆகியவற்றை நாடிச் செல்வதாகவும் அங்கு தங்களுக்கான விசாக்களுக்கு விண்ணப்பித்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

*(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)*




## முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு இயந்திரம் கையளிப்பு




முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சுமார் 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு மற்றும் கிருமி நீக்கும் இயந்திரங்கள் நேற்று வியாழக்கிழமை (15) மாலை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தினால் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டது.

*(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*

-(மன்னார் நிருபர்)